உ

திருச்சிற்றம்பலம்

# பதிப்புரை

''என்னை நன்ருக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றுகத் தமிழ்செய்யு மாறே.''

—திருமந்திரம். (81)

உலகத்திலே பயின்றுவரும் ஆயிரக்கணக்கான மொழிகளுள்ளே, தொன்மை நலஞ்சான்று, புதுமையெழில் பெற்று, இருவகை வழக்கிலும் ஓங்கித் திகழ்வது நம் அருந் தமிழ் மொழியேயாகும். பரந்துகிடக்கும் இப் பைந்தமிழ் இலக்கிய வரலாற்றில், குரு லிங்க சங்கமங்களை வழிபட்டு, முத்தியின்பம் பெற்ற சிவனடியார்களின் வரலாற்றைக் கூறும் தனித்தமிழ்க் காப்பியம், திருத்தொண்டர்புராணம் என்னும் பெரியபுராணமாகும். இச் சிவநெறிப் பெருங் காப்பியத்தை இயற்றியவர் திருத்தகு தெய்வச் சேக்கிழார் நாயனுராவர். அன்னுர் அப்புராணத்தைப் பாடிய வரலாற்றைக் கொற்றவன்குடி உமாபதிசிவாசாரியார் இலக்கிய நலங்கொழிக்கும் ஒரு சிறு நூலாக இயற்றியுள்ளார். அதுவே இந்தத் 'திருத்தொண்டர் புராண வரலாறு என்னும் சேக்கிழார்நாயனுர் புராண'மாகும்.

தெய்வத் தமிழ் மணம் கமழும் இவ்வினிய நூற்கு, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த, திருவண்ணுமலை ஆதீனத்து ஸ்ரீ ஆறுமுகத்தம்பிரான் சுவாமிகள் ஓருரை செய்து ஏறத்தாழ எண்பது ஆண்டுகளின் முன்னே அச்சிற் பதிப்பித்து வெளியிட்டிருந்தார்கள். அதன் பிரதிகள் இப்போது கிடைப்பது அரிதாகிவிட்டது.

ஈழத்திருநாட்டு மக்களுக்குச் சிறந்த தமிழ் நூல்களைக் குறைந்த விலையில் எளிதிற் கிடைக்கச் செய்தலை முதல்



நோக்கமாகக்கொண்டு 14-1-1967 இல் (தைப் பொங்கல் திருநாளன்று) தொடங்கப்பட்ட **யாழ்ப்பாணம், தமிழ் நூல்கள் பதிப்பு விற்பனைக் கழகத்தின்** முதல் வெளியீடாக உமாபதிசிவாசாரியார் இயற்றிய இத் ''திருத்தொண்டர் புராண வரலாறு'' என்னும் ''சேக்கிழார் நாயனுர் புராணம்'' — ஸ்ரீ ஆறுமுகத்தம்பிரான் செய்த உரை, பண்டிதர் மு. கந்தையா B. A. செய்த உரைவிளக்கக் குறிப்பு முதலியவற்ருேடு வெளிவரத் திருவருள் பாலித்தமையையுன்னிப் பெருமகிழ்வு எய்துகின்ருேம்.

இந்நூல் இத்துணைச் சிறப்புக்களோடு வெளிவருதற்கு உற்றுழி உதவியோர் பலராவர்,

பழைய நூற்பிரதியைத் தந்துதவிய சைவப்பெரியார், ஆசிரியர் மு. வைத்தியலிங்கம் அவர்கள்,

பழைய நூற்பிரதியைப் பார்த்துத் தட்டச்சிற் பிரதி செய்து தந்த இளைஞர் திரு. மு. நடராசா அவர்கள்,

நூலையும் உரையையும் படித்து வேண்டிய இடங்களில் பொருத்தமான சிறந்த குறிப்புரைகளை எழுதியுதவிய இனிய அன்பர், பண்டிதர் மு. கந்தையா, B. A. அவர்கள்,

இந்நூல் வெளிவரவேண்டுமெனப் பலவகையிலும் ஊக்கங்காட்டி, ''உமாபதிசிவாசாரியர் வரலாற்றை''யும் வரைந்து வழங்கிய, சித்தாந்தச் செம்மல் திரு. மு. ஞானப்பிரகாசம், B. A., B. Sc. அவர்கள்,

சிவநெறி விளக்கத்துக்கு உதவும் பேரார்வத்தினுல், தமது அரிய காலக்கழிவையும் பொருள்செய்யாது, சிறந்ததோர் அணிந்துரை உதவிய தருமை ஆதீனத் தமிழ்ப் புலவர், சித்தாந்த கலைச்செல்வர் திரு. க. வச்சிரவேல் முதலியார் B. A., L. T. அவர்கள்,

இந்நூலில் வெளியிடுவதற்கென சேக்கிழார்நாயனுர் படத்தைத் தந்துதவிய, அகில இலங்கைச் சேக்கிழார் மன்றச் செயலாளர் பண்டித **வித்துவான்** திரு. க. கி. நடராஜன், B. O. L. அவர்கள்,

இந்நூல் பிரதிசெய்யப்பட்ட காலத்தில் தட்டச்சாள ரோடு உடனிருந்து வழிகாட்டியும், இது அச்சேறுங் காலத் தில் அச்சுத்தாள்களை ஒப்புநோக்குதல், திருத்தஞ்செய்தல் முதலிய பணிகளைப் புரிந்தும், செய்யுள் முதற்குறிப்பகராதி, அரும்பதவிஷய அகராதி முதலியவற்றை ஆக்கியும், உரை யாசிரியர் ஸ்ரீ ஆறுமுகத்தம்பிரான் சுவாமிகளின் வரலாற்றுக் குறிப்புக்களைத் தேடித்தந்தும், இன்னும் பலதுறைகளில் உறுதுணையாகவிருந்த சைவப்புலவர், திரு. இ. செல்லத் துரை அவர்கள்,

இது அச்சேறுங் காலத்தில் எம்மோடு ஒத்துழைத்து உதவிசெய்த, யாழ்ப்பாணம் கூட்டுறவு அச்சக அதிபர், எழுதுவினைஞர், அச்சுக்கோப்போர் முதலிய தொழி லாளர்கள்,

ஆகிய அனைவருக்கும், அவர்களின் அரிய சேவைகளைப் பாராட்டி, எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ்வரிய நூலை மனமுவந்து ஏற்றுக்கொள்வதோடு, இதனைத் தொடர்ந்து வெளிவரவிருக்கும் நூல்களையும் ஏற்று, எங்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் தருமாறு தமிழ்ப் பெருமக்களை வேண்டிக்கொள்ளுகின்றோம்.

"செல்வமலி குன்றத்தூர்ச் சேக்கிழா ரடிபோற்றி"

**சி. சிவகுருநாதன்**
தலைவர்
யாழ்ப்பாணம்
தமிழ்நூல்கள் பதிப்பு விற்பனைக் கழகம்

20-5-67.

காஞ்சிபுரம் பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளி
ஓய்வுபெறும் தலைமை ஆசிரியர்,
தருமையாதீனத் தமிழ்ப் புலவர்,
சித்தாந்தக் கலைச்செல்வர்
**உயர் திரு. க. வச்சிரவேல் முதலியார்** B. A., L. T.
அவர்கள் அன்புடன் அளித்த

# அணிந்துரை

உ

திருச்சிற்றம்பலம்

பெரியபுராணம் என வழங்கும் திருத்தொண்டர் புரா ணம் சைவத் திருமுறைகளின் வரலாற்றையும், பெருமை யினையும் அவற்றின் நுண்பொருள்களையும் வரலாற்று முறையில் நன்றினிது விளக்குவது. பின்வந்த சைவசித்தாந்த சாத்திரங்களிற் கூறப்படும் நுண்பொருள்கட்குப் பெரிய புராணத்துட் கூறப்படும் நாயன்மார்கள் வரலாறுகள் பல ஆங்காங்கு எடுத்துக்காட்டப்படுகின்றன.

இத்தகைய அருமந்த புராணத்தின் வரலாற்றினைக் கேட்போர்க்கும் கற்போர்க்கும், உணர்வும் இன்பமும் பெருகும்படி, அதன் அருமை பெருமைகளை நன்கினிது விளக்க எழுந்ததே சேக்கிழார்நாயனார் புராணம். இது பெரியபுராணத்தின் மூலங்களையும், அமைப்பினையும், அதன் கண் கூறப்படும் வரலாறுகளை எந்த எந்த முறைகளில் வகைப்படுத்தி உணரவேண்டும் என்பதையும், அது தோன் றிய சூழ்நிலையினையும், அது பெரிதும் பாராட்டிப் போற் றுந்தக்கதாக இருத்தலையும் தெளிவாக எடுத்துக்காட்டு நின்றது. இதனைச் சைவர்களே யன்றித் தமிழிலக்கிய ஆராய்ச்சியை மேற்கொள்வோரும் கற்றுணர்தற்கு உரியர்.

இஃது இப்பொழுது உரையுடன் அச்சிடப்படுகின்றது. உரை பாட்டில் வரும் சொற்களை விடாமல் வேண்டும் இடங்களில் இலக்கணக் குறிப்புகள் கொடுத்து எழுதப்பட்டுள்ளது. இதனை அச்சிட்டு வெளியிடுவோர் உரையை நன்கு ஆராய்ந்து உரையாசிரியர் கருத்தை விளக்குதற்கும், அவர் கொண்ட முறையினும் சிறக்கப் பொருள்கொள்ள வாய்ப்பு உள்ள இடங்களைச் சுட்டுதற்கும் சுருங்கிய குறிப்புக்கள் கொடுத்துள்ளனர். அச்சுப் பிழையின்றி வெளியிடப்படுகின்றது.

இதன்கண் 77-வது ஆகக் கொடுக்கப்பட்டுள்ள செய்யுள் 34-வது பாட்டிற்குப்பின் 35-வது பாட்டிற்குமுன் இருந்திருத்தல் வேண்டும் என்பது பாட்டுக்களின் கருத்தொழுங்கையும் சந்த இசை ஒற்றுமையினையும் கொண்டு நோக்கின் விளங்கும்.

இவ்வெளியீடு கருதப்பட்டோர் அனைவர்க்கும் கருதிய பயனை விளைக்கும் என்பது திண்ணம்.

இங்ஙனம்

**க. வச்சிரவேல் முதலியார்**

(ஓய்வுபெறும் தலைமை ஆசிரியர்,
காஞ்சிப் பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளி)

யாழ்ப்பாணம்.
20-5-67.



# உமாபதிசிவாசாரிய சுவாமிகள் வரலாறு

**சைவப்பெரியார் திரு. மு. ஞானப்பிரகாசம் B. A., B. Sc.
அவர்கள் எழுதியுதவியது.**

'சேக்கிழார் புராணம்' என்னும் இந்நூலின் ஆசிரியர் உமாபதி சிவாசாரிய சுவாமிகள். இவர் தில்லைவாழ் அந்தணர் குலத்தில் அவதரித்தவர். சைவசமய சந்தான குரவர்களில் ஒருவர். அதனால் தில்லைவாழ் அந்தணர்க்குரிய வைதீக ஒழுக்கசீல நிலைகளும், சந்தான பரம்பரையினர்க்குரிய தீட்சைப் பெரும்பேறுகளும் ஒருங்கே வாய்க்கப் பெற்ற ஒப்பற்ற ஒரு குரவர் பெருமானாய்த் திகழ்ந்தவர். இவரது வழிமாணக்கராகிய நமச்சிவாயமூர்த்தி சுவாமிகள் வாயிலாகவே திருவாவடுதுறைச் சைவ ஆதீனம் தோன்றியதெனில், இவர் பெருமையை யாம் எங்ஙனம் எடுத்துரைக்க வல்லேம்?

அருணந்திசிவாசாரிய சுவாமிகள் போலவே, உமாபதி சிவாசாரிய சுவாமிகளும் ஒரு சகலாகம பண்டிதராகவும், சகலகலா வல்லுநராகவும் திகழ்ந்திருக்கிறார் என ஊகிப்பதற்கு இடமுண்டு. பல்வேறு துறைகளினின்று பல்வேறு கலைகளைப் பயின்ற பல்வேறு அறிஞர் கூட்டத்தினரும், சைவசித்தாந்தப் பேருண்மைகளை உணரப் பல்வேறு முறைகளை அனுசரித்து, எட்டுச் சித்தாந்த நூல்களை சுவாமிகள் ஒருவரே அருளியிருக்கிறனர். அந்நூல்கள் முழுவதையும் ஒருங்கு சேர்த்து, 'சித்தாந்த அஷ்டகம்' எனக் கூறுவர்.

சைவசித்தாந்த நூல்களின் இலட்சியார்த்தப்பொருள், 'சிவாலயங்களையும் சிவனடியாரையும் சிவனெனவே வழிபடுக' என்பதாம். இந்த உண்மையை வலியுறுத்தும் சமய இலக்கிய நூல்கள் பல சுவாமிகளால் அருளப்பட்டன. அவற்றுள் மிகச் சிறந்த நூலாகப் பெரியோர்களால் கொள்ளப்படுவது, 'சேக்கிழார் புராணம்' எனப்படும் இந்நூல்

சைவத்திருநெறியின் தொன்மைப் பெருங்கோலத்தை அற்புதமாக விளக்கும் செழுந்தமிழ்ப் பாடலொன்றை இந்நூலில்உமாபதிசிவாசரிய சுவாமிகள் அருளியுள்ளார்.

அது:

"ஓருலகோ வொருதிசையோ வொருபதியோ தம்மி
லொருமரபோ வொருபெயரோ வொருகாலந் தானே
பேருலகி லொருமைநெறி தருங்கதையோ பன்மைப்
பெருங்கதையோ பேரொன்றே வல்லவே யிதனை
யேருலகெ லாமுணர்ந்தோ தற்கரிய வன்னென்
றிறைவன்முத லடியெடுத்துக் கொடுத்தருளக் கொண்டு
பாருலகி னுமகனின் றெடுத்துக்கை நீட்டப்
பாடிமுடித் தனர்தொண்டர் சீர்பரவ வல்லார்." என்பது.

தில்லைமூவாயிரவரி லொருவரும்
சந்தானசாரியர் நால்வரி லொருவரும்
ஆகிய
உமாபதிசிவாசாரிய சுவாமிகள்
திருவடி வாழ்க.



## திருக்கைலாய பரம்பரைத் திருவண்ணாமலை ஆதீனம்

# ஸ்ரீஆறுமுகத்தம்பிரான் சுவாமிகள் வரலாற்றுச் சுருக்கம்

இந்நூலுரையாசிரியராகிய ஸ்ரீமத் ஆறுமுகத்தம்பிரான் சுவாமிகளின் பிள்ளைத் திருநாமம் ஆறுமுகம்பிள்ளை என்பதாகும். இவர் சிவநெறியும் செந்தமிழும் செழித்தோங்கும் ஈழத் திருநாட்டின் தவப்புதல்வர்களுள் ஒருவர். பத்தொன்பதாம்நூற்றாண்டிலே, ஈழநாட்டின் சிகரமெனவிளங்கும் யாழ்ப்பாணத்திலே பரசமய ஒளிமழுங்கத் தோன்றிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் சைவத்தையும் தமிழையும் பேணிக் காத்து வளர்க்கவெனத் தம்மிளமைக் காலத்தில், வண்ணார் பண்ணையிலே நடாத்திய பாடசாலையில் மாணவனாகி, அன்னாரின் பிரதம சீடராய் அவரைப்போல நைட்டிகப் பிரமசாரியாகவிருந்து, அவருக்குப்பின் அவருடைய தரும பரிபாலகராக விளங்கிய சதாசிவம்பிள்ளையுடனும், சுவாமிநாதையர், நடராசையர், விசுவநாதையர், கந்தசுவாமிப் பிள்ளை, ஆறுமுகச்செட்டியார் முதலாகிய நன்மாணாக்கர்களுடனும் கருவிநூல்களையும் சமயநூல்களையும் நாவலரிடம் கேட்கும் வாய்ப்புப் பெற்றுப் பெரும்புலமையடைந்தவர்.

ஆறுமுகம்பிள்ளையின் கல்வி, அறிவு, ஒழுக்கம், புலமை முதலியவற்றைக் கண்டு மகிழ்ந்த நாவலரவர்கள் அவரை அதே கலாசாலையில் ஆசிரியராகப் பணியாற்ற நியமித்தார். உதவி ஆசிரியராக இருந்த ஆறுமுகம்பிள்ளை மாணவர்கள் நிலையறிந்து அவர்கள் உளங்கொள்ளும் வகையில் கல்வி போதித்துப் பெரும்பணியாற்றிவந்தார்.

ஆறுமுகநாவலர்பால் அவர்தம் கலாசாலையிற் பயின்று வந்த மாணவர்களுள் சிலர் பயிற்சியின்பின் இல்லறத்திலே புகுந்தார்கள்; சிலர் சிவத்தலயாத்திரையை விரும்பி, சிதம்பரம் முதலிய தலங்களுக்குச் சென்றனர். ஆனால் ஆறுமுகம் பிள்ளையோ யாக்கை நிலையாமையையும் செல்வநிலையாமையையும் உணர்ந்து, இல்லற வாழ்வை வெறுத்து, தம்மாசா

ரியர் நாவலர் வழியில் நைட்டிகப் பிரமசாரியாகி, சில காலம் சைவப்பிரசாரகராய்ப் பணியாற்றி வந்தார்.

சிலகாலங் கழிய அவர் திருவண்ணாமலைக்குச் சென்று அங்கேயுள்ள ஆதீனத்திற் சேர்ந்து, அங்கிருந்த மகாசந்நிதானமவர்களிடம் தீட்சைபெற்றுக் காஷாயம் தரித்து அவ்வாதீனத் தம்பிரானார்.

ஆதீனத்திற் கிடைத்த அரிய வாய்ப்பைப் பெரிதும் பயன்படுத்தி ஆறுமுகத்தம்பிரான் சுவாமிகள் மெய்கண்ட சாத்திரம் என்னும் பதினான்கு சித்தாந்த சாத்திரங்கள், பன்னிரண்டு திருமுறைகள் முதலியவற்றைக் கருவிநூலுணர்ச்சியுடன் கசடறக் கற்றார்.

அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் பல கோவில்களில் பத்திசிரத்தையோடு படித்துக் கற்றாரும் மற்றாரும் கேட்டின்புறப் பயன் கூறப்பட்டுவந்த பெரியபுராணம் என்னும் திருத்தொண்டர் புராணத்துக்கு ஓர் உரையில்லாமையையும், அது செய்யக்கூடிய தகுதியுடையவர் அவர் ஒருவரே என்பதையும் அவரிடம் எடுத்துக்கூறி விண்ணப்பித்த பலருடைய விருப்பத்துக்கிசைய தம்மரிய சித்தாந்த ஞானத்தைத் துணைக்கொண்டு, அதற்குச் செறிவும் நுட்பமும் வாய்ந்ததோர் அரிய உரையை ஆறுமுகத்தம்பிரான் சுவாமியவர்கள் வகுத்தார்கள். அதுவே பெரிய புராணத்துக்கு முதன்முதல் எழுதப்பட்டவுரையாகும். அதனைத் தொடர்ந்து நம்பியாண்டார்நம்பிபுராணம் என்னும் திருமுறைகண்டபுராணம், திருத்தொண்டர் புராண வரலாறு என்னும் சேக்கிழார் நாயனார்புராணம், அற்புதத்திருவந்தாதி, மூத்தநாயனார் இரட்டை மணிமாலை முதலியவற்றுக்கும் சிறந்தவுரைகள் எழுதியுள்ளார்கள்.

செந்தமிழுக்கும் சிவநெறிக்கும் சிறந்த பணியாற்றிய இவர், கலியுகாப்தம் 4993க்குச் சமமான கி. பி. 1891 ஆம் ஆண்டளவில் திருவண்ணாமலையிற் சமாதியெய்தினார்கள்.

உ

## சேக்கிழார் நாயனார் துதி

ஓங்கு சைவத் துயர்பரி பாடையும்
வீங்கு பேரொளிப் பத்திசெய் மேன்மையுந்
தேங்கு பேறுந் தெரிந்தருள் சேக்கிழான்
பாங்கு சேர்மலர்ப் பாதம் பரசுவாம்.

—*திருவெம்பர்ப்புராணம்.*

தொகையா நாவ லூராளி
தொடுத்த திருத்தொண் டப்பெருமை
வகையால் விளங்க வுயர்நம்பி
யாண்டார் வகுப்ப மற்றதனைத்
தகையர் வன்பின் விரித்துலகோர்
தம்மை யடிமைத் திறப்பாட்டின்
உகையா நின்ற சேக்கிழான்
ஒளிர்பொற் கமலத் தாள்பணிவாம்.

—*திருவானைக்காப்புராணம்.*

பரவுறும் அடியார் மேன்மை
பாடவல் லவரென் றெங்கள்
குரவருள் ஒருவர் அன்பிற்
குறிக்கொடு துதித்தல் கண்டுந்
தரமிகு சிறப்பு வாய்ந்த
தன்மையார் சேக்கி ழாரைக்
கரவறத் துதியேம் என்னிற்
கடும்பிழை ஆகும் அன்றே.

—*திருப்பெருந்துறைப்புராணம்.*

**திருச்சிற்றம்பலம்.**

*(இ-ள்.) திருக்கிளருங் கயிலைமலைக் காவல் பூண்ட — முத்திச்செல்வம் விளங்குகின்ற திருக்கயிலாயத்தைக் காவல் செய்யும்; செல்வ மலி திருநந்தி மரபில் வந்து — அதிகார மிக்க நந்திதேவர் பரம்பரையில் அவதாரஞ்செய்து; கருக்குழியி லெமைவீழா தெடுத்தாட் கொள்ளும் — பிறவிக்குழியில் வீழாவண்ணம் அடியோங்களை எடுத்தாட்கொள்ளும்; கருணை மிகு மெய்கண்டதேவர் — கிருபைமிகுந்த மெய்கண்டதேவரது; தூய மருக்கிளர் தாள்பரவு மருணந்தி தேவர் மகிழும் — தூய்மையாகிய வாசனைமிக்க திருவடியைத் துதிக்கும் அருணந்திதேவர் மகிழும்படியான; மறைஞான தேவருக் கன்பாகி யிருக்கு முமாபதிதேவர் — மறைஞான சம்பந்த சிவாசாரியாருக்கு அன்பாய் வீற்றிருக்கும் உமாபதிசிவாசாரியர்; சேக்கிழார்த மிசைப் புராண முரைத்தாரென்ப — சேக்கிழார்நாயனுர் திருவாய்மலர்ந்தருளிய திருத்தொண்டர்புராணவரலாற்றை விரித்துச்சொல்லினர் என்று சொல்லுவார்கள். எ-று. மாது — ஓ - அசை.*

*மரபென்றது ஈண்டு உபதேசபரம்பரையை.* *(104)*

சந்தானுசாரியர் நால்வருளொருவராகிய உமாபதிசிவாசாரியர்

*அருளிச்செய்த*

**திருத்தொண்டர் புராண வரலாறு என்னும்**

## சேக்கிழார்நாயனுர் புராணம்

**மூலமும்**

**ஸ்ரீ ஆறுமுகத்தம்பிரான் சுவாமிகள் உரையும்**

*முற்றிற்று.*

சேக்கிழார்நாயனுர் திருவடி வாழ்க.

திருச்சிற்றம்பலம்.

உ

# செய்யுள் முதற் குறிப்பகராதி

*எண்கள் செய்யுளெண்கள்*


| செய்யுள் | எண் | செய்யுள் | எண் | செய்யுள் | எண் |
|---|---|---|---|---|---|
| அடையலார் | 30 | சிவனடியாருடன் | 48 | நலமலியுந்திருத் | 83 |
| அண்டவாணரெதிர் | 95 | சிறப்புடைய | 81 | நாடெங்கும் | 12 |
| அண்டவாணர்தொ | 103 | சீராருஞ் | 2 | நேசனுர் | 14 |
| அத்தகைய | 18 | செப்பரிய | 42 | பரந்தெழுந்த | 3 |
| அலைபுனற்பகி | 31 | செம்பியர்பூபதி | 32 | பழுதகலத்திரு | 76 |
| அவகதையாய்ப் | 22 | செறிமதயானை | 87 | பாடினர் | 72 |
| அவரவர்கள் | 26 | சேக்கிழான் நமது | 64 | பாலாறு | 11 |
| அறுதிபெறத் | 37 | சேரனுர் | 44 | பாறுமுக | 5 |
| அறுபதுபேர் | 52 | சேவைகாவலர் | | பூசிப்பவர்சிலர் | 69 |
| அறுவரெவரவர் | 39 | தொண்டர் | 34 | பூசைமறந்தனன் | 39 |
| அன்றுமுதல் | 82 | சேவைகாவலர் | | பூழியர்கோன் | 6 |
| ஆடகநாடக | 75 | புராண | 54 | மதுர இராமா | 91 |
| ஆயவேலை | 98 | தம்பதிகுன்றத் | 19 | மருவுதிரு | 84 |
| ஆயுமறை | 24 | தாயனுர் | 40 | மலரயனுந் | 4 |
| ஆரூரர்திருத் | 49 | தாய்மலர்ந்த | 8 | மற்றதுகண்டு | 71 |
| இத்தகைய | 85 | தாளுடைய | 80 | மன்றுளாடிதிரு | 65 |
| இப்படியிப்படி | 94 | திருக்கிளருங் | 104 | மாறுகொடு | 15 |
| இப்படியே | 28 | திருஞானசம்பந்தர் | 43 | மின்மழை | 90 |
| இமயமலை | 13 | திருத்தொண்டர் | 86 | முண்டமானதிரு | 60 |
| இல்லறத்திலிருந்து | 27 | திருநீலகண்டனுர் | 45 | மூவரோதுதிரு | 96 |
| இல்லறத்தில்நின்ற | 47 | திருநெறித்தமிழ் | 77 | மெய்யுள சிவ | 92 |
| இறைஞ்சி | 62 | திருமறையோர் | 36 | வந்துசூழ | 35 |
| உள்ளலார்புரம் | 33 | தில்லைமறையோர் | 38 | வந்து சொன்ன | 56 |
| ஊடர்க்கடலை | 9 | தில்லைமாநகர் | 32 | வளவர்கோன் | 59 |
| என்றுசொல்ல | 99 | தில்லையெல்லை | 29 | வளவனுங்குண் | 21 |
| ஓருலகோ | 50 | தில்லைவாழந்தணரே | | வள்ளலார்திரு | 78 |
| கண்டகண்ணருவி | 63 | முதலாகச் | 7 | வாயிலார் | 17 |
| கண்டபோதுள | 61 | தில்லைவாழந்தணரே | | வாரணத்திலிவரை | 88 |
| கருங்கடலைக் | 51 | முதற்பண் | 25 | வாழிதிருத் | 79 |
| கலகமிடு | 20 | தெள்ளுதிரைக்கடல் | 70 | வாழிதில்லைமணி | 101 |
| கவசமணிந்த | 67 | தேசிலங்குமுகில் | 102 | வானுலகும் | 1 |
| கவுணியர் | 46 | தேர்முழக்கொலி | 58 | விளைகழனி | 14 |
| காண்டமிரண்டா | 53 | தேவுடனே | 10 | வீதிவீதிகள் | 57 |
| காராளர் | 16 | தொண்டர்சீர் | 100 | வென்றிவேல் | 55 |
| காவலனுரிவர் | 89 | தொண்டர்தொண்டு | 66 | வேதியர் வேத | 68 |
| சங்கொடுபேரி | 73 | தோடுசெய்ததிரு | 97 | வேதியர் வேள்வி | 74 |

உ
சிவமயம்

# அரும்பத விஷய அகராதி

(எண்கள் செய்யுளெண்கள்)

**அடிசில்** - திருவமுது. (82)

**அடைக்காய்**-வெற்றிலை பாக்கு. (82)

**அடைவுபட**-முறைபாக. (22, 24, 28)

**அதிபத்த நாயனர்**-இவர் பரதவர். சோழ நாட்டு நாக பட்டினத்தில் அவதரித்தவர். நவரத்தின மிழைத்த பொன் மீனைத் தாம் வைத்துக் கொள்ளாமல் சிவார்ப்பணஞ் செய்தவர். (40)

**அத்தாணி** - பெரிய மண்டபம். (75)

**அநுசர்** - இளையவர். (98)

**அந்தாதி** - முற் செய்யுளிறுதியும் பிற் செய்யுண்முதலும் ஒன்றுபடத் தொடுக்கும் நூல். (23, 81)

**அப்பாலுமடிச்சார்ந்தார்** - தொகையடியார் ஒன்பது பிரிவினருள் ஒரு பிரிவினர். இவர் தமிழ் நாட்டுக்கு அப்பாலுள்ளவரும் அறுபத்துமூவர் காலத்துக்கு முன்னும் பின்னு முள்ளவருமாகப் பலதிறத்தினர். (42)

**அமண்** - சமணர். (20)

**அமர்நீதிநாயனர்**-இவர் சோழநாட்டுப் பழையாறையில் அவதரித்தவர். கோவணத்துக்கு நிறையாக, மனைவி மக்கள் சொத்துக்களுடன் தம்மையுஞ் சிவனடியாருக்கு ஈந்தவர். (39)

**அரங்கு** - சபை. (75)

**அரந்தை** - பிறவித் துன்பம். (3)

**அருணந்தி தேவர்** - சந்தானசாரியருள் இரண்டாமவர். மெய்கண்டதேவரின் மாணவர். சிவஞானசித்தியார் என்னுஞ் சைவசித்தாந்த நூலை அருளிச் செய்தவர்.

**அருண்மொழித்தேவர்**-பெரிய புராண ஆசிரியராகிய சேக்கிழார்நாயனர். (12, 18)

**அறம் வளர்த்த மாதா** - முப்பத்திரண்டறங்களையும் வளர்த்த உமாதேவியார். (14)

**அறுவர் முடிமன்னர் புராணங்களாவன** - கோச்செங்கட்சோழ நாயனர், புகழ்ச்சோழநாயனர், மானியார், இடங்கழி நாயனர், நின்றசீர் நெடுமாற நாயனர், சேரமான்பெருமாள் நாயனர் என்போரைப்பற்றிய புராணங்கள். (36, 39)

**ஆடகம்** - பொன். (75)

**ஆரூரடிகள்**-திருவாரூரிலே எழுந்தருளியிருக்கும் தியாகராசப் பெருமான். (23)

**ஆரூரர்** - சுந்தரமூர்த்திநாயனர். (49, 52)

**ஆழி** - சமுத்திரம். (6)

**ஆளுடையபிள்ளை**- திருஞானசம்பந்தமூர்த்திநாயனர். (80)

**ஆறைஞ்ஞூறு மறையோர்**-தில்லைவாழந்தணர் மூவாயிரவர். (62)

**ஆனயநாயனர்**-இவர் மழநாட்டு மங்கலவூரி லவதரித்தவர்; பசு மேய்க்கும்போது திருவைந்தெழுத்தைப் புல்லாங் குழலிலே அமைத்து வாசிக்குந் திருத்தொண் டியற்றியவர். (40)

**இசைஞானியார்**-சுந்தரமூர்த்தி நாயனரின் தாயார். (52)

**இசைத்தமிழ் வல்ல நாயன்மார் நால்வர். அவர்கள்** - திருநாளைப்போவார்நாயனர், ஆனயநாயனர், திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனர், பரமனையே பாடுவார். (46)

**இடங்கழிநாயனர்**- இவர் கோனாட்டுக் கொடும்பாளூரிலே அவதரித்தவர். அடியார் வழிபாடியற்ற நெல் திருடினவர்க்கு மேலும் நெல்லும் பொருளு மீந்தவர். (39)



**இடையிருவர் புராணங்களாவன:** திருமூலநாயனர், ஆனயநாயனர் என்போரைப்பற்றிய புராணங்கள். (36)

**இப்பொழுதுமிருந்தானை வழிபடுவோரும் இனிமேலுந் திருமேனி கொடுவருவோரும்**- செய். 42. உரை பார்.

**இம்மை**- இப்பிறப்பு, இவ்வுலகம். (21)

**இயற்பகைநாயனர்**- இவர் சோழநாட்டுக் காவிரிப்பூம்பட்டினத்திலவதரித்தவர். சிவனடியாருக்குத் தமது மனைவியையே தானமாகக் கொடுத்தவர். (39)

**இயற்றமிழ் இசைத்தமிழ் வல்ல நாயன்மார் மூவர். அவர்கள்:** திருஞானசம்பந்தமூர்த்திநாயனர், திருநாவுக்கரசுநாயனர், காரைக்காலம்மையார். (46)

**இயற்றமிழ்வல்ல நாயன்மார் ஐவர். அவர்கள்:** ஐயடிகள் காடவர்கோன் நாயனர், திருமூலநாயனர், காரிநாயனர், பொய்யடிமையில்லாத தமிழ்ப்புலவர், சேரமான் பெருமாள் நாயனர். (46)

**இரட்டைமணிமாலை:** திருவிரட்டை மணிமாலை. இது காரைக்காலம்மையாரால் அருளிச் செய்யப்பட்டது. (81)

**இருக்குமுதன்மறைநான்கு**- இருக்கு, யசு, சாமம், அதர்வணம் என்னும் நான்கு வேதம். (86)

**இருக்கு**- முதலாம் வேதம். ருக்-புகழ்தல்.

**யசு**- இரண்டாம் வேதம். யஜ்-நிவேதித்தல். பலியிடுதல்.

**சாமம்**- இது சதாசிவமூர்த்தியுடைய அதோ முகங்கள் நான்கினுள் ஒன்றாகிய வாமதேவ முகத்தினின்றும் தோன்றியது. இதனை வியாச முனிவர் சைமினி முனிவருக்கு உபதேசித்தருள, அவர் வழியாகச் சுமந்து முதலாயினோர்க்குப் பலவகைப்பட மொழியப்பட்டமையால், ஆயிரஞ் சாகைகளாயிற்று. ஸாமந்-மனத்திற்கு அமைதியை உண்டாக்குதல்.

**அதர்வணம்**-நான்காம் வேதம். இது ஐம்பது சாகைகளுள்ளது. முன்னைய மூன்று வேதம் போலாது இடையாய வேதம் என்றும், வேள்வி முதலிய ஒழுக்கங் கூறாது பெரும்பான்மையும் உயிர்கட்கு ஆக்கமேயன்றிக் கேடு சூழும் மந்திரங்களையும் கூறுமென்றும் நச்சினார்க்கினியர் சொல்வர்.

**உத்தம சோழப்பல்லவன்** - சேக்கிழாருக்கு அநபாயனளித்த சிறப்புப்பெயர். (18)

**உபயகுலம்** - தாய் தந்தையராகிய இருவர் மரபு (21)

**உமாபதிதேவர்**-இவர் சந்தானசாரியருள் நாலாமவர். மறைஞானசம்பந்தரின் மாணவர். சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா, உண்மைநெறிவிளக்கம், போற்றிப் பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, சங்கற்பநிராகரணம் என்னுஞ் சைவசித்தாந்த அட்டகத்தை அருளிச் செய்தவர். (104)

**'உமிக்குத்திக் கைவருந்துதல்'**- செய். 20. பார்.

**உருத்திர பசுபதி நாயனர்**- இவர் சோழநாட்டுத் திருத்தலையூரிலவதரித்தவர். அல்லும் பகலும் திருக்குளத்திலே கழுத்தளவிலே நின்று ஸ்ரீருத்திரமந்திரஞ் செபித்தவர். (38)

**'உலகெலாம்'**- இறைவன் அசரீரிவாக்காக ''உலகெலாம்'' என்று அடியெடுத்துக் கொடுத்தமை (31. பார்.) உலகெலாம் என்பது முதற்குறிப்பாய்

நின்று அச்சொல்லாற் றொடங்குந் திருத்தொண்டர் புராணத்தை உணர்த்தியமை (81 குறிப்புரை பார்.)

**உழக்கு**-காற்கொத்து (13)

**உள்ளலார்புரம்** - அடையலார்புரம் (30, 33)

**ஊரறியாக்கதை ஏழு**- 37 உரைக் குறிப்புப்பார்.

**ஊர்க்கடல்**-சாம்பற்புழுதி (9)

**எட்டுழக்கு**- இரண்டு கொத்து(13)

**எண்டயங்கரசன்**-எத்திக்கினும் தன் கீர்த்தியைப் பரவச் செய்த அநபாயன். (66) இவ்வுரைச் சிறப்பறிய 66 உரைக்குறிப்புப் பார்.

**எண்ணித்தனையென்றறியாத திருக்கூட்டம்**- செய். 37 உரைபார்.

**எறிபத்தநாயனார்**- இவர் சோழ நாட்டுக் கருவூரி லவதரித்தவர். பூக்குடலையைச் சிவனடியாரிடமிருந்து பிடித்திழுத்துச் சிதறிய பட்டத்து யானையை வெட்டியவர். (41)

**ஏகாலி மரபு**- வண்ணார் மரபு (41)

**ஏயர்கோன் கலிக்காமர்**-ஏயர்கோன் கலிக்காமநாயனார்; இவர் வேளாளர். சோழநாட்டுத் திருப்பெருமங்கலத்தில் அவதரித்தவர். சிவபெருமானைத் தூதாக விடுத்த சுந்தரமூர்த்தி நாயனாரை இகழ்ந்து பின்பு திருவருள்விளையாட்டால் அவருடைய நண்பரானவர் (17, 40)

**ஏர்**-திருவருள் ஞானம் (2)

**ஏனாதிநாத நாயனார்** - இவர் சான்றார். சோழநாட்டு எயினனூரி லவதரித்தவர். போர் புரியும் பகைவன் நெற்றியிலே திருநீற்றைக் கண்டதும் அவனாற் கொல்லப்படும்படி நடந்து கொண்டவர். (40)

**ஐந்தாந் தமிழ் வேதம்**- திருத்தொண்டர் புராணம் (86)

**ஐயடிகள் காடவர் கோன் நாயனார்**- இவர் தொண்டை நாட்டுக் காஞ்சிபுரத்திலவதரித்தவர். பதவியை வெறுத்துத் தலயாத்திரை செய்து, க்ஷேத்திர வெண்பாவால்நிலையாமை கூறியவர். (39)

**ஐயடிகள் வெண்பா**- ஐயடிகள் காடவர் கோன் நாயனார் செய்தருளிய முத்தித் திருவெண்பா. இது ஐயடிகள் க்ஷேத்திர வெண்பா எனவும் படும். (81)

**ஒல்லை**-ஆதி (7)

**ஒல்லையவர்**-என்பது ஒருசொன் நீர்மையதாய் அடியாரைக் குறித்தது. (7 உரைக்குறிப்புப்பார்.)

**ஓகை** - உள்ளக்கிளர்ச்சி - தனிஓகை- ஒப்பற்ற உள்ளக்கிளர்ச்சி - பேரானந்தம் (7)

**ஓலிடல்** - ஓலமிடல், ஆரவாரித்தல். (65)

**கங்கைகுலதிலகர்** - சேக்கிழார். (59)

**கச்சியேகம்பர்** - காஞ்சிபுரத்திற் கோயில் கொண்டருளியிருக்கும் ஏகம்பமூர்த்தியாகிய சிவபெருமான். (13)

**கஞ்சாறர்**- மானக்கஞ்சாறநாயனார். இவர் வேளாளர். கஞ்சாறூரிலே அவதரித்தவர், திருமணந்தொடங்கும்போது திருமணப்பெண்ணாகிய தமது மகளின் தலைமயிரை அறுத்துச் சிவனடியாருக்கீந்த சிவபுண்ணியத்தால் முத்திபெற்றவர். (17-40)

**கணநாதநாயனார்** - இவர் சோழநாட்டுச் சீகாழியிலவதரித்தவர். திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரை வழிபட்டுச் சரியைத் தொண்டர்க்குப் பயிற்சியளித்தவர். (38)

**கணம்புல்லநாயனார்** - இவர் இருக்குவேளூரிலவதரித்தவர். புல்விற்று நெய்கொண்டு திருவிளக்கெரித்துவருங்கால் நெய்யின்மையாற் றமது தலைமயிரையே எரித்தவர். (41)



**கண்டை** - கைம் மணி (73)

**கண்ணப்பநாயனார்** - இவர் வேடர். தொண்டைநாட்டு உடுப்பூரி லவதரித்தவர். ஆறேநாளில் அளவுகடந்த மெய்யன்புபூண்டு காளத்தியப்பருக்குக் கண்ணப்பியவர். (40)

**கம்பு** - மடை (77)

**கருநெறி** - பிறவி வரும் வழி (77)

**கருப்பு** - பஞ்சம் (99)

**கலிக்கம்பநாயனார்** - இவர் நடுநாட்டுப்பெண்ணாகடத்திலவதரித்தவர். தமது பழைய வேலையாள் சிவனடியாராக வந்தபோது அவரை வழிபட்டவர். அவரை வழிபடாத தமது மனைவியாரின் கையை வெட்டியவர். (39)

**கலித்துறை** - பாவினத் தொன்று, அது நெடிலடி நான்கு கொண்டு முடிவது. (23, 24.)

**கலியநாயனார்** - இவர் செக்கார். தொண்டைநாட்டுத் திருவொற்றியூரிலவதரித்தவர். திருவிளக்கிற்கு எண்ணெய் இல்லாமையால் தமது இரத்தங்கொண்டு எரிக்க முயன்றவர். (41)

**கவசம்** - விபூதி, உருத்திராக்கம். (60, 67, 101)

**கவளிகை** - புத்தக உறை. (53, 92)

**கவித்த** - தரித்த, சூடிய. (16)

**கழற்சிங்கநாயனார்** - இவர் சிவபூசைக்குரிய பூவை மோந்ததற்காகத் தமது மனைவியாரின் மூக்கைச் சிவனடியாரொருவர் அறுத்த தண்டனை போதாதென்று அவருடைய கையையும் வெட்டியவர். (39)

**கழனி** - வயல் [14]

**களறிற்றறிவார்** - சேரமான் பெருமாள்நாயனார். (81)

**கற்பகக்கன்று**-கற்பகவிநாயகர் (4)

**காதிய** - பொடிசெய்த. (74)

**காராளர்** - வேளாளர்.

**காரிநாயனார்** - இவர் சோழநாட்டுத் திருக்கடவூரிலவதரித்தவர். கோவை பாடிப் பொருள் பெற்று ஆலயப்பணி செய்தவர். (41)

**காரைக்காலம்மையார்** - (பேயார்) இவர் சோழநாட்டுக் காரைக்காலிலவதரித்தவர். சிவபெருமானை வேண்டி, மாம்பழமும் பேய் வடிவமும் பெற்றவர்; ஆலங்காட்டிலே ஆடல் கண்டவர்; இறைவனால் அம்மையே என்றழைக்கப்பெற்றவர். திருவாலங்காட்டு மூத்ததிருப்பதிகம் (இரண்டு), திருவிரட்டை மணிமாலை, அற்புதத் திருவந்தாதி என்னும் நூல்களை அருளிச்செய்தவர். (39)

**காலாறு** - (அறுகால்) வண்டு, தேனீ (11)

**காவியம்** - (காப்பியம்) உறுதிப்பொருள் கூறும் கதைத்தொடர் நிலைச்செய்யுள். (28, 77)

**காழி** - சீகாழி (10)

**காளம்** - எக்காளம் ஓர் ஊதுசின்னம் (73)

**கிடா** - கடா, ஆண் எருமை, இடபம் (14)

**கிடாஈசன்** - இடபத்தை வாகனமாகவுடைய சிவபெருமான். (14)

**கிடாமறலி** - எருமையை வாகனமாகவுடைய யமன். (14)

**கிளிகள்** - திருத் தொண்டர்புராண படனஞ் செய்தல். செய். 70 பார்.

**குங்குலியக்கலயநாயனார்** - இவர் சோழநாட்டுத் திருக்கடவூரிலவதரித்தவர். மனைவியின் தாலியைவிற்றுக் குங்குலியம் வாங்கித் திருத்தொண்டியற்றியவர், சாய்ந்த இலிங்கத்

தைக் கழுத்திற் பூமாலை கொண்டு நிமிர்த்தியவர். (38)

**குடதிசை** - மேற்குத்திசை. (4)

**குண்டமண்** - கோள் கூறுஞ் சமணர். (21)

**குண்டலம்** - ஆறு உருத்திராக்கங்கள் சேர்த்தமைத்த காதணி. (60)

**குதுகுலித்தல்** - வியப்பினுல் உடம்பு பூரித்தல், உரோமாஞ்சிதங் கொள்ளுதல். (65,84)

**குரவரொருவர்** - புராணமாவது திருநீலகண்டநாயனுர் புராணம். (36, 40)

**குருட்டா** - (குருடு + ஆ) குருட்டுப் பசு. (10)

**குருநெறி** - உபதேசிக்கும் பாரம்பரிய நெறி (77)

**குருவருளால் உயர்முத்தியடைந்தவர்கள் பதிஞெருவர். அவர்கள்** - திருஞானசம்பந்தமூர்த்திநாயனுர், திருநாவுக்கரசுநாயனுர், திருமூலநாயனுர், நின்றசீர் நெடுமாற நாயனுர், மங்கையர்க் கரசியார், குலச்சிறை நாயனுர், திருநீல கண்டத்து யாழ்ப்பாண நாயனுர், பெருமிழலைக் குறும்ப நாயனுர், கணநாத நாயனுர், அப்பூதியடிகள் நாயனுர், சோமாசிமாறநாயனுர் (43)

**குலச்சிறைநாயனுர்** - இவர் பாண்டிநாட்டு மழவர் குடியிலவதரித்தவர். அரசன் சமணனுயிருந்தபோதும் சிவனடியாரை வழிபட்டார். திருஞானசம்பந்தரை அழைத்துவந்து அரசனையும் நாட்டினரையும் சைவராக்கியவர். (41)

**குலவுநடம்** - (ஐந்தொழிலும்) விளங்குகின்ற திருநடனம் (4)

**குழியில் விழுந்தளறுபாய்தல்** - செய். 20பார்.

**குழை** - மணியிழைத்து வட்டமாய்ச் சதுரப்படவியற்றிய காதணி (60)

**குளத்துழான்** - சோழனுற் குடியேற்றப்பட்ட நாற்பத்தெண்ணுயிரவரில் ஒருகுடி. (12)

**குளப்பாக்கிழான்** - ஷை (12)

**குறுநில மன்னரைவர் புராணங்களாவன** - நரசிங்கமுனையரையர் நாயனுர், கூற்றுவநாயனுர், கழற்சிங்க நாயனுர், மெய்ப்பொருள் நாயனுர், ஐயடிகள் காடவர் கோன் நாயனுர் என்போரைப்பற்றிய புராணங்கள். (39)

**குறுமுனிவன்** - அகத்தியமுனிவர் (91)

**குன்றத்தூர்** - சேக்கிழார்நாயனுர் அவதரித்தவூர் தொண்டைநாட்டின் கணுள்ளது. (7,11, 19)

**குன்றை** - குன்றைநாடு, இது எழுபத்தொன்பது நாடுகளுள் ஒன்று. (11)

**குன்றைமுனி** - சேக்கிழார் (79,84, 91,101)

**குன்றைவேந்தர்** - சேக்கிழார் (24,80)

**கூடல்கிழான்** - சோழனுற் குடியேற்றப்பட்ட நாற்பத் தெண்ணுயிரவரில் ஒருகுடி, (12)

**கூற்றுவநாயனுர்** - இவர் களந்தையிலவதரித்தவர், தில்லைவாழந்தணர் தமக்கு முடிசூட்ட மறுக்கவே, தில்லையம்பலவன் திருவடிகளையே முடியாகச் சூட்டப்பெற்றவர். (39)

**கொழு** - ஏர் (13)

**கொழுமிகுதி** - ஏர்வள மிகுதி (13,14)

**கோ** - பசு (10)

**கோச்செங்கட்சோழநாயனுர்** - இவர் சோழநாட்டினர்; முடிமன்னர்; எழுபது சிவாலயங்கள் கட்டுவித்தவர். முற்பிறவியிற் சிலந்தியாய்ச் சிவபூசை செய்தவர். (39)

**கோட்புலி** - (கோட்புலிநாயனுர்) இவர் வேளாளர். சோழ நாட்டுத் திருநாட்டியத்தான் குடியிலவதரித்தவர் சிங்கடி, வனப்பகை என்னும் இரண்டு புதல்வியரைச் சுந்தரமூர்த்திநாயனுருக்கு அர்பணஞ்செய்து, சிவபூசைக்குரிய நெல்லையுண்ட சுற்றத்தாரனைவரையும் சிசுவுட்படக் கொன்று சிவபுண்ணியத்தாற் சிவபதம் பெற்றவர். (17-39)

**கோபாலர்** - இடையர் (40)

**கோமயம்** - சாணம் (76,78)

**கோலி** - சூழ்ந்து (11)

**சடையனுர்** - சுந்தரமூர்த்திநாயனுரின் தந்தையார் (52)

**சண்டேசுரநாயனுர்** - இவர் மறையவர். சோழநாட்டுத் திருச்சேய்ஞ்ஞலூரில் அவதரித்தவர். அபிஷேகப் பாற்குடத்தை இடறிய தந்தையின் தாளை வெட்டித் தொண்டர்க்கு நாயகமானவர். (38)

**சதுமறை** - நான்குவேதம், செய். 2 குறிப்புரை பார்; 'இருக்குமுதன் மறைநான்கு' பார்.

**சத்தியார்** - சத்திநாயனுர். இவர் வேளாளர். சோழ நாட்டு வரிஞ்சியூரில் அவதரித்தவர். சிவனடியார்களைக் குறை கூறுபவர்களுடைய நாக்கை அறுத்தலாகிய திருத்தொண்டியற்றி முத்தி பெற்றவர்.

**சமயமவை ஆறு** - அகச் சமயங்கள் ஆறு. அவை:- பாடாண வாதம், பேதவாதம், சிவசமவாதம், சிவசங்கிராந்தவாதம், ஈசுவரவிவகாரவாதம், சிவாத்துவித சைவம் என்பன.

**படாண வாதம்:-** '' ஆன்மாவிற்கு ஆணவ மலம் சகசமாய்



அநாதியேயுள்ளது. அதனுல் மாயை கன்மங்கள் ஆன்மாவைப் பொருந்தும். இறைவன் இருவினைக் கீடாகச் சரீரங்களைக் கொடுப்பன். ஆன்மா அவற்றைப் பொருந்தி, இன்ப துன்பங்களை அநுபவிக்கும். அப்பொழுது ஆன்மாவின் அறிவை ஆணவமலம் மறைக்கும். அதனுற் பிறவித் துன்பம் அதிகரிக்கும். பாசஞானமெல்லாந் தன்கீழ் வியாப்பியமென்றறிந்து நீங்குதன் மாத்திரையே முத்தி. முத்தியிலும் ஆன்மா ஆணவமலம் நீங்காது கட்டறிவும், சுகதுக்க அநுபவமுமற்றுப் பாடாணம் போற் கிடக்குமென்பதாம்'' பாடாணம்—கல்.

**பேதவாதம்:-** ''மும்மலங்களும் செம்பிற்களிம்புபோல, ஆன்மாக்களுக்கு அநாதியே உள்ளன. அவற்றுலான்மா சுகதுக்கங்களை அநுபவிக்கும். கரணங்களிற் சென்ற அறிவு பக்குவம் வந்தவிடத்து அவ்வாறு செல்லாது தன்னிடத்தே வந்து ஒடுங்கி நிராதாரமாய் நிற்கும். இரசகுளிகையினுற் செம்பு களிம்பு நீங்கிப் பொன்னுகுமாறுபோல, ஆன்மாவும் இறைவன் திருவருளால் மும்மலங்களும் நீங்கிப் பெறுவானும் பேறுமாயிருக்கும் என்பதாம்.''

**சிவசமவாதம்:-** ''பதிஞானம் பசுஞானம் பாசஞானம் என்னும் மூன்றும் அநாதியேயுள்ளன. பாசஞானமாகிய இந்திரியங்கள் விடயங்களை விளக்கப் பசுஞானம் அவற்றைப் புசிக்கும். இவ்விரு ஞானங்களும் நீங்கியவிடத்து ஆன்மா ஒன்றையுஞ்சுட்டியறியாது அறிவு மாத்திரையாயிருக்கும். அப்பொழுது வேட்டுவன் புழுவை எடுத்துக் கொள்வதுபோலப் பதிஞானம் ஆன்

மாவை எடுத்துக் கொள்ளும். புழுவேட்டுவனை நினைத்து அதன் வடிவாகி, மேலும் அதன் தொழிலையுஞ் செய்தல்போல, ஆன்மாவும் அப்பதியை நினைந்து அதன் வடிவாகி, மேலும் அப்பதி செய்யும் பஞ்ச கிருத்தியத்தையும் செய்யும் என்பதாம்.''

**சிவசங்கிராந்தவாதம்:-** ''ஆன்மாவின் சந்நிதியிலே காந்த பசாசம்போல உடல் இயங்குமிடத்து அதன்கணின்று கருவிகளே விடயங்களை அனுபவிக்கும். மலம் நீங்கியவிடத்துக் கண்ணாடியில் முகவொளி தோற்றுமாறுபோல முதல்வனது திருவருள் ஆன்மாவினிடத்துச் சங்கிரமித்துத் தோன்றும். அப்பொழுது உப்பளத்தி லிட்டவை யெல்லாம் உப்பா மாறுபோல, ஆன்மாச் சிவமேயாய் அவ்வான்மாவின் சந்நிதியில் அறிவனவாகிய பசு கரணங்களுஞ் சிவகரணங்களாய் மாறிச் சிவத்தை யறியுமென்பதாம்,''

**ஈசுவரவிவகாரவாதம்:-** ''பலதுளையுடைய குடத்திலேற்றிய தீபம்போல நவத்துவாரமுடைய உடம்பில் ஆன்மா அறிவாய் நிற்கும். நிற்பினும் அவ்வப் பொறிகளளவாய் அவ்வவற்றைக் கூடியறியும். அது மலபரிபாகமுஞ் சத்திநிபாதமுஞ் சேர்ந்த விடத்து முதல்வனது திருவருள் ஞானத்தைப் பெற்று வெய்யிலிலே திரிந்தாரொருவன் மரநிழல் கண்டு ஆறுவதுபோல, அம்முதல்வனது திருவடி நிழலை அடையும். இங்ஙனம் கூடிய விடத்து, உயிர் முதல்வனது உபகாரத்தை அவாவாது என்பதாம்.''

**சிவாத்துவித சைவம்:-** ''பதிபசு பாசங்களினியல்பும் தத்துவங்களுக்குத் தோற்ற வொடுக்கங்களும் அஞ்சவத்தைப்படும் வேறுபாடுகளும் அனைத்துஞ் சித்தாந்த சைவரோடொப்பக் கொண்டு பசுபாசங்கள் பதி வியாபகத்தின் வியாப்பியமாய் நிற்பனவன்றித் தனித்த பொருள்களல்ல, சிற்சத்தியின் பரிணமமே. பதிபசு பாசங்களுக்குத் தம்முள் வேற்றுமை குணகுணிகட்குளதாகிய வேற்றுமைபோல உட்பேதமேயன்றிப் புறப்பேதமன்று. மரத்தில் வியாப்பியமான கவடு கொம்பு முதலியன வெல்லாம் மரமேயாமாறு போலச் சதசத்தும் அசத்துமாகிய அனைத்தும் சத்தெனவேபடும். ஆகையால் பதித்தன்மையின் வேறாய்ப் பசுவுக்கு அறியுந்தன்மையின்று, சத்தாகிய பதிப்பொருளே ஆன்மாவினிடமாக நின்று அறியுமென்பதாம்.

சிவாத்துவித சைவம் நிமித்த காரணத்துக்குப் பரிணமங்கூறுவதாதலின் அது நிமித்த காரண பரிணமவாதமெனவுங் கூறப்படும்.''

**சாக்கியர்** - சாக்கிய நாயனார் - இவர் வேளாளர், திருச்சங்க மங்கையிலவதரித்தவர். நாடோறும் மறவாது சிவலிங்கத்தின்மீது கல்லெறிந்து வழிபட்டவர். (17, 40)

**சாதுரங்கசேனை** - சதுரங்கசேனை - நால்வகைச் சேனை - அவை:- தேர்ப்படை, யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை, (57)

**சாரவாசி** - சாரம் + ஆசி - பயன்தரா நின்ற ஆசிமொழி. (59)

**சாலியர்** - நெய்வோர். (41)

சாலியர் ஒருவர் புராணமாவது நேசனார் நாயனார் புராணம். (36, 41)



சான்றார் ஒருவர் புராணமாவது ஏனாதிநாத நாயனார் புராணம். (36, 40)

**சித்தத்தைச் சிவன்பால் வைத்தவர்** - தொகையடியார் ஒன்பது பிரிவினருள் ஒரு பிரிவினர். (41)

**சித்தியாதிரைநாள்** - சித்திரைத் திருவாதிரைநாள். (85); சித்திரையாதிரைநாள் பார்.

**சித்திரையாதிரைநாள்** - சித்திரைத் திருவாதிரைநாள். இது பெரிய புராணம் அரங்கேற்றத் தொடங்கிய நாளும் முடிக்கப்பெற்ற நாளும். (80)

சிந்தாமணி நூல் புரட்டு நூல் திருட்டுநூலென்பது. செய். 21 பார்.

**சிரந்தழுவு சைவநெறி** - எல்லாச் சமயத்துக்குந் தலைமையாயுள்ள சைவ நெறி. (3)

**சிவசமயம்** - சிவனை முழுமுதற் கடவுளாகக்கொண்ட சைவசமயம். (26,27)

**சிவசாதனங்கள்**-முண்டனம், சடை, குண்டலம், சிரமாலை, கரமாலை, தாழ்வடம் முதலியன. (34,67,92)

**சிவவேதியர்** - ஆதிசைவ மறையவர். (38)

**சிவவேதியர் புராணமோரிரண்டு** - அவை புகழ்த்துணைநாயனார், முப்பொழுதுந் திருமேனிதீண்டுவார் என்போரைப்பற்றிய புராணங்கள். (36,38)

**சிவலிங்கத்தால் முத்தியடைந்தோர் முப்பதின்மர்** - அவர்கள்: எறிபத்தநாயனார், குங்குலியக்கலயநாயனார், முருகநாயனார், கண்ணப்பநாயனார், ஆனாயநாயனார், அரிவாட்டாயநாயனார், மூர்த்திநாயனார், சண்டேசுரநாயனார், திருநாளைப்போவார் நாயனார், (-43) சேரமான்பெருமாள் நாயனார், சாக்கியநாயனார், கூற்றுவநாயனார், தண்டியடிகள்நாயனார், சிறப்புலிநாயனார், உருத்திரபசுபதிநாயனார், கலிக்காமநாயனார், கலியநாயனார், காரிநாயனார், அதிபத்தநாயனார், நீலநக்கநாயனார், பூசலார்நாயனார், கணம்புல்லநாயனார், கோட்புலிநாயனார், நமிநந்தியடிகள் நாயனார், கழற்சிங்கநாயனார், வாயிலார்நாயனார், செருத்துணைநாயனார், புகழ்த்துணை நாயனார், ஐயடிகள் காடவர்கோன்நாயனார், கோச்செங்கட்சோழநாயனார். (44)

**சிவனடியாருடன் சேர்ந்து முத்தியடைந்தோர்** - திருஞானசம்பந்தமூர்த்திநாயனாரின் திருமணத்தன்று அவருடன் முத்திபெற்றோர்; சுந்தரமூர்த்திநாயனாருடன் கைலைக்குச்சென்ற சேரமான் பெருமாள் நாயனாரும் ஏனைய பரிசனங்கள் பலரும். (47)

**சிவனடியாருடன் பகைத்து நரகடைந்தோர்** - மூர்த்திநாயனார் சிவபெருமானுக்குப் படைத்த சந்தனக்காப்பை விலக்கியகருநட மன்னன் முதலானோர். (48)

**சிவனடியாருடன் பகைத்து முத்தியடைந்தோர்** - சண்டேசநாயனாரின் தந்தையார் எச்சதத்தன், கோட்புலிநாயனாரின் ஆணையைக்கடந்த சுற்றத்தார். (48)

**சிவனடியாரை வழிபட்டு முத்தியடைந்தோர் பத்தொன்பதின்மர். அவர்கள்** - திருநீலகண்ட நாயனார், இயற்பகைநாயனார், மூர்க்கநாயனார், சிறுத்தொண்டநாயனார், திருக்குறிப்புத்தொண்ட நாயனார், விறன்மிண்டநாயனார், இடங்கழிநாயனார், முனையடுவார்நாயனார், சத்திநாயனார், அமர்நீதிநாயனார், மெய்ப்பொருள்நாயனார், ஏநாதிநாத நாயனார், புகழ்ச் சோழநாயனார், மானக்கஞ்சாறநாயனார், நின்றசீர் நெடுமாற நாயனார். காரைக்காலம்மையார், நர

சிங்கமுனையரையர் நாயனார், கலிக்கம்பநாயனார், நேசநாயனார், (45)

**சிவாகமங்கள்** -"சிவபெருமான் அருளிச்செய்த ஆகமங்கள். ஆகமம் - கடவுளிடமிருந்து வந்த நூல். ஆ + கம் + அ: வருதலையுடையது. ஆ—மறுதலைப் பொருள்படும் உபசர்க்கம். கம்-போதல். அ-விகுதி. இது, மந்திரகலை, தந்திரகலை, உபதேசகலை என மூவகைப்படும் மந்திரகலை கிரியைகளுக்கு உரியவாகிய மந்திரங்களைக் கூறுவது. தந்திரகலை-குண்டமண்டல வேதிகாதிகளைக் கூறுவது. உபதேசகலை ஆன்மாவின் மலச்சார்பு அறும்படி கூறும் ஞானோபதேசத்தை உடையது. ஆ-சிவஞானம். க-மோக்ஷசாதனம். ம-மலநாசம் எனப் பொருள் கொண்டு ஆகமம் ஆன்மாக்களுக்கு மலத்தை நாசஞ்செய்து ஞானத்தை உதிப்பித்து மோக்ஷங் கொடுத்தற்காக உபதேசிக்கப்பட்ட நூலெனவும், ஆ-பசு, கம்-பதி, ம-பாசம் எனப் பொருள் கொண்டு பதி பசு பாசம் என்பவற்றின் இலக்கணங்களை விரித்துரைத்தும் நூல் எனவுங் கூறுவர்." (77)

**சிறப்புப்பாயிரம்** - செய். 104 பார்.

**சிறப்புலிநாயனார்** இவர் மறையவர். சோழ நாட்டுத் திருஆக்கூரிலவதரித்தவர். அடியார்க்கு அமுதும் பொருளும் அளிக்குந் திருத்தொண்டியற்றியவர். (86)

**சிறுகோல்**-சிறிய தாற்றுக்கோல். (38)

**சிறுத்தொண்ட நாயனார்** - இவர் மாமாத்திரர். சோழநாட்டுத் திருச் செங்காட்டங் குடியிலவதரித்தவர். வாதாபிப் போர் வென்றவர். சிவனடியாருக்குத் தமது ஒரே பிள்ளையைக் கறியாகச் சமைத்து வைத்தவர். (38)

**சீவன்முத்தர்**-சீவிக்கும் பொழுதே பாசத்தினின்றும் விடப்பட்டவர். தநுவாதிகளோடு கூடியுங் கூடாமை நின்றுணையாத்தழுந்தினோர். சீவன் + முத்தர். முத்தர்-விடப்பட்டவர். (26)

**சுந்தரமூர்த்திநாயனார் காலத்திருந்த அடியார்கள் பன்னிருவர் அவர்கள்:** இசைஞானியார். ஏயர்கோன் கலிக்காமநாயனார், கழறிற்றறிவார் நாயனார், கழற்சிங்கநாயனார், கோட்புலி நாயனார், சடைய நாயனார், செருத்துணைநாயனார், சோமாசிமாறநாயனார், நரசிங்கமுனையரைய நாயனார், பெருமிழலைக் குறும்ப நாயனார், மானக்கஞ்சாற நாயனார், விறன்மிண்ட நாயனார். (49)

**சுந்தரமூர்த்தி நாயனார் காலத்திலோ அதற்கு முன்னரோ, இன்ன காலமென்று தெளிவாகக் கூற முடியாத காலத்திலோ இருந்தவர்கள் இருபத்தொன்பதின்மர், அவர்கள்:** அதிபத்தநாயனார், அரிவாட்டாயநாயனார், ஆனாயநாயனார், இளையான் குடிமாறநாயனார், இடங்கழி நாயனார், இயற்பகைநாயனார். உருத்திரபசுபதி நாயனார், எறிபத்த நாயனார், ஏனாதிநாத நாயனார், ஐயடிகள் காடவர்கோன் நாயனார், கலிக்கம்ப நாயனார், கலியநாயனார், காரி நாயனார், கூற்றுவ நாயனார், சத்தி நாயனார், சிறப்புலி நாயனார், தண்டியடிகள் நாயனார், திருக்குறிப்புத் தொண்ட நாயனார், திருநாளைப்போவார் நாயனார், திருநீலகண்ட நாயனார், நேச நாயனார், புகழ்ச்சோழ நாயனார், புகழ்த்துணை நாயனார், பூசலார் நாயனார், முனையடுவார் நாயனார், மூர்க்க நாயனார், மூர்த்திநாயனார், மெய்ப்பொருள்நாயனார், வாயிலார் நாயனார். (49)



**சுருதி**-வேதம், மந்திரம், ச்ரு-கேட்டல். தி-கருவிப் பொருளும், செயப்படு பொருளும் உணர்த்தும் விகுதி. (79)

**சுருதிமொழி**-வேதவாக்கியம். (23)

**சுவேதராமன்**-பலபத்திரராமன். (14)

**சூடகம்**-வளையல் (கைவளை) (13)

**சூளிகை**-சிகரம் (75)

**செக்கார் ஒருவர் புராணமாவது**-கலிய நாயனார் புராணம் (36, 41)

**செம்பியர்கோன்**- அநபாயச்சோழன் (19)

**செம்பியர்பூபதி**-அநபாயச் சோழன் (23)

**செம்பியன்**-அநபாயச் சோழன் (55, 63)

**செருத்துணையார்** - செருத்துணைநாயனார். இவர் வேளாளர். சோழநாட்டுத் தஞ்சாவூரிலவதரித்தவர். கழற்சிங்க நாயனாருடைய மனைவி சிவபூசைக்குரிய பூவை மோந்ததற்காக அவர் மூக்கை அரிந்தவர். (17, 39)

**செல்கதி**-செல்லத்தக்க முத்தி நெறி. (25, 27)

**செழுந்தமிழோர்**-சேக்கிழார். (10)

**சேக்கிழார்**-சேக்கிழார்மரபிலுதித்த அருண்மொழித் தேவர். அம்மரபை விளக்கியமையால் சேக்கிழார் என்னும் பெயருளதாயிற்று. (7, 11, 18, 21, 23, 28)

**சேக்கிழார் இறைவனடி எய்தியமை.** செய். 100 பார்

**சேக்கிழார் திருக்கோலம்** - செய். 60 பார்.

**சேக்கிழார் பெருமை**-செய். 51 பார்.

**சேக்கிழார் வழிபாட்டுப்பயன்** - செய். 103 பார்.

**சேக்கிழார் வீதிவலம் வருங்காட்சி**- செய். 87 - 94 பார்.

**சேடன்**-ஆதிசேடன்; ஆயிரநாவுடையவன்; அறிவின் மேம்பட்டவன். (91)

**சேரமான்பெருமாள் நாயனார்** (கழறிற்றறிவார் நாயனார்)-இவர் முடிமன்னர். மலைநாட்டுக் கொடுங்கோளூரிலவதரித்தவர். நடராசர் பாதச் சிலம்பொலிகேட்கத் தாழ்த்தமை கொண்டு சுந்தரமூர்த்தி நாயனார் தோழமை பெற்றவர். சிவபெருமானுடையதிருமுகப் பாசுரம் பெற்றவர். கயிலை சென்று ஞானவுலாப் பாடியவர். (39)

**சேவைகாவலர், சேவையர்காவலர்** - சேக்கிழார். (25, 33; 34, 35, 54, 56, 62, 87; 89, 90)

**சேவைகுலதிலகர்**- சேக்கிழார். (95)

**சேவையர் கோ, சேவையர் கோன்**- சேக்கிழார் (94, 49)

**சைவகதை**-திருத்தொண்டர் புராணம் (79)

**சோமாசிமாறநாயனார்**-இவர் மறையவர். சோழநாட்டுத் திரு அம்பரில் அவதரித்தவர்; வேத வேள்வி செய்து, சுந்தரமூர்த்தி நாயனாரை வழிபட்டவர். (38)

**சோழர் பெருமான்** - அநபாயச் சோழன். (79)

**சோழன்**-கரிகாற்சோழன். இளஞ்சேட்சென்னி என்பானின் மகன்; காவிரிப்பூம் பட்டினத்தைத் தலைநகராகக் கொண்டு அரசாண்டவன். (12); அநபாயச் சோழன் (24, 60)

**சோழேசன்** - அநபாயச்சோழன். (91)

**ஞானநூல்**-சைவசித்தாந்தநூல். (77)

**ஞானமதம்**-ஞானசத்தி. (1)

**தண்டியடிகள் நாயனார்**-இவர் சோழநாட்டுத் திருவாரூரி லவதரித்தவர். பிறவிக் குருடராயிருந்தும் திருக்குளப் பணிசெய்து குருடு நீங்கிச் சமணரை வென்றவர். (41)

**தந்திரிமார்**-சேனைபதிகள். (71)

**தமிழ்நூற்கடல்** - பெரிய புராணமென்னுஞ் சமுத்திரம். (9)

**தவகதை**-தவநெறிகூறுங்கதை (22)

**தவசரிதத் தொழில்** - சிவனடிமைத் தொண்டு. (67)

**தவர்** - தவாசிரமத்திலுள்ளவர்கள். (32)

**தளவம்**-முல்லை (59)

**தனிக்கதை** ஒப்பற்ற கதை. (22)

**தனியடியார் அறுபதின்மர்**-செய். 52 பார்.

**தானு**-நிலைபேறு (35)

**தாயனார்** - அரிவாட்டாயநாயனார்- இவர் வேளாளர். சோழநாட்டுக் கணமங்கலத்தில் அவதரித்தவர். சிவநிவேதனத்துக்குரிய பொருள் சிந்தியதற்காகத் தமது கழுத்தை அரிந்தவர். (17, 40)

**திருக்குறிப்புத்தொண்ட நாயனார்** - இவர் வண்ணார். தொண்டைநாட்டுக் காஞ்சிபுரத்தி லவதரித்தவர். சிவனடியாருக்கு வாக்களித்தபடி துணியைத் தோய்த்துலர்த்தித் தரமுடியாமற் போனமையால் தமது தலையைக் கல்லின் மீது மோதிக்கொண்டவர். (41)

**திருக்கூட்டம் ஒன்பது** - தில்லைவாழந்தணர், பத்தராய்ப் பணிவார், பரமனையே பாடுவார், சித்தத்தைச் சிவன்பால் வைத்தவர்கள், திருவாரூர்ப் பிறந்தவர்கள், பொய் யடிமையில்லாப் புலவர்கள், முழுநீறு பூசும் முனிவர்கள், முப்போதுந் திருமேனி தீண்டுவார், அப்பாலு மடிச் சார்ந்தார். (52)

**திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்** - இவர் மறையவர். சோழநாட்டுச் சீகாழியி லவதரித்தவர். மூன்றாம் வயதில் உமாதேவியாரால் ஞானப் பாலூட்டப் பெற்றுத் தேவாரம் பாடி, என்பு பெண்ணுருவாக்கியமை முதலிய பல அற்புதங்களைச் செய்தவர். தமது திருமணத்துக்கு வந்தவரெல்லார்க்கும் முத்திப்பேறளித்தவர். (38)

**திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் காலத்திருந்த அடியார் பதினொருவர்**-அவர்கள்: அப்பூதியடிகள் நாயனார். கணநாத நாயனார், குங்குலியக்கலய நாயனார், குலச்சிறை நாயனார், சிறுத்தொண்டநாயனார், திருநாவுக்கரசு நாயனார், திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார், திருநீலநக்க நாயனார், நின்றசீர் நெடுமாறநாயனார், மங்கையர்க்கரசியார், முருக நாயனார். (49)

**திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் காலத்துக்கு முற்பட்டோர் ஒன்பதின்மர்**. அவர்கள்:- அமர்நீதி நாயனார், கணம்புல்ல நாயனார், கண்ணப்ப நாயனார், காரைக்காலம்மையார், கோச்செங்கட் சோழ நாயனார், சண்டேசுவரநாயனார், சாக்கிய நாயனார், திருமூலநாயனார், நமிநந்தியடிகள்நாயனார். (49)

**திருத்தொண்டத் தொகை**-அறுபத்துமூன்று நாயன்மார் திருநாமங்களையு மெடுத்துச் சுந்தரமூர்த்தி நாயனாராற் பாடியருளப்பட்ட தேவாரத் திருப்பதிகம். (7, 52)

**திருத்தொண்டர்புராணம்** பெரிய புராணம் - அறுபத்துமூவர் நாயன்மார் வரலாறு. (53)

**திருத்தொண்டர் புராண அமைப்பில் அதன் உறுப்பு, சரீரம், உயிர் ஆவன**: செய். 81 பார்.



**திருத்தோணிபுரம்**- சீகாழி. ''தெள்ளுதிரைக் கடல் மீது மிதந்த'' மையால் அப்பெயருடைத்தாயிற்று. (70)

**திருத்தோணிபுர வள்ளல்** திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார். (70)

**திருநந்தி மரபு**—நந்திதேவர் பரம்பரை - (உபதேச பரம்பரை) அம்மரபு முறையே: நந்திதேவர், சனற்குமார முனிவர், சத்தியஞான தரிசனிகள், பரஞ்சோதி முனிவர், மெய்கண்டதேவர், அருணந்தி சிவாசாரியார், மறைஞான சம்பந்தர், உமாபதிசிவாசாரியார் என்ப. (104)

**திருநாகேச்சரம்**-காவிரியின் கரையிலுள்ள சிவஸ்தலம். அதுபோலொரு சிவஸ்தலத்தைச் சேக்கிழார் குன்றத்தூரி லமைத்து அதன் திருப்பெயரிட்டு வழிபட்டனர். (18, 19)

**திருநாரையூர்நம்பி** - திருநாரையூரி லவதரித்த நம்பியாண்டார் நம்பி. (52)

**திருநாளைப்போவார்நாயனார்** - (நந்தனார்). இவர் நீசர்மரபினர். சோழநாட்டு ஆதனூரி லவதரித்தவர். தில்லையைக் காண விரும்பித் தீப்புகுந்து, முனிவராயெழுந்து, சிற்றம்பலவன் சந்நிதியில் மறைந்தவர். (41)

**திருநீலகண்டத்துப்பாணர்** (திருநீலகண்டத்து யாழ்ப்பாண நாயனார்) - இவர் பாணர். நடுநாட்டுத் திருவெருக்கத்தம்புலியூரி லவதரித்தவர். திருஞான சம்பந்தமூர்த்திநாயனாருடன் திருத்தலங்கடோறுஞ் சென்று யாழ்த்தொண்டு புரிந்தவர். (25, 36, 40)

**திருநீலகண்டநாயனார்** - இவர் குயவர், சோழநாட்டுச் சிதம்பரத்தி லவதரித்தவர். அயலறியாவண்ணம் மனைவியின் சபதத்துக்கு உடன்பட்டு அவளைத் தீண்டாது, இளமையிலும் முதுமையிலும் இல்லறம் நடத்திப் பின் இறையருளால் இளமை பெற்றவர். (36,40)

**திருநீலநக்கநாயனார்** - இவர் மறையவர். சோழநாட்டுச் சாத்தமங்கையி லவதரித்தவர். அன்போடு சிவலிங்கத்தை ஊதித் துமித்தல் அநுசிதமன் றெனக் காட்டியவர். பாணர்க்கு வேதிகையில் இடமளித்து, திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருமணத்தை நடத்தி முத்திபெற்றவர், (36, 38)

**திருநெறித் தமிழ்—திருநெறியதமிழ்** தேவாரத் திருமுறைகள் ஏழு. அவை: சம்பந்தரருளிச்செய்த முதன் மூன்று திருமுறைகளும் அப்பரருளிச்செய்த 4 ஆம், 5 ஆம், 6 ஆம் திருமுறைகளும் சுந்தரரருளிச்செய்த 7 ஆந் திருமுறையும். (34,77,81)

**திருநெறித்தலைவர்** - திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார், திருநாவுக்கரசுநாயனார், சுந்தரமூர்த்திநாயனார் ஆகிய மூவர் (34)

**திருமந்திரமாலை** - திருமூல நாயனார் அருளிச்செய்தது. 3000 திருவருட் பாடல்களையுடையது.

**திருமரபு குறித்துரையாப் புராணம் பதின்மூன்று** - அவை: குலச்சிறை நாயனார், தண்டியடிகள் நாயனார், கணம்புல்லநாயனார், எறிபத்த நாயனார், பெருமிழலைக் குறும்ப நாயனார், பத்தராய் பணிவார், பரமனையே பாடுவார், சித்தத்தைச் சிவன்பால் வைத்தார்கள், திருவாரூர் பிறந்த புலவர்கள், பொய் யடிமையில்லாத புலவர்கள், முழுநீறு பூசும் முனிவர்கள், அப்பாலுமடிச்சார்ந்தார் என்போரைப் பற்றிய புராணங்கள். (37, 41-42)

**திருமறையோர் புராணமவை பதின் மூன்று** - அவை: தில்லைவாழந்தணர், குங்கிலியக்கலய நாயனார், முருகநாயனார், உருத்திரபசுபதிநாயனார், சிறப்புலிநாயனார், கணநாத நாயனார், பூசலார்நாயனார், சண்டேசுவர நாயனார், சோமாசிமாறநாயனார், நமிநந்தியடிகள் நாயனார், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், அப்பூதியடிகள் நாயனார், திருநீலநக்கநாயனார் என்போரைப் பற்றிய புராணங்கள். (36, 38)

**திருமுண்டம்** - திரிபுண்டரமாகத் தரித்த விபூதி (60.101)

**திருமும்மணிக்கோவை** - திருவாரூர் மும்மணிக்கோவை. இது சேரமான் பெருமாள்நாயனாரால் அருளிச் செய்யப்பட்டது. (81)

**திருமுறை** - திருத்தொண்டர் புராணமென்னும் (பன்னிரண்டாந்) திருமுறை (69)

**திருமுறைகண்டராசராசதேவர்** - திருமுறைகண்ட சோழராகிய அபயகுல சேகரன்.

**திருமூலநாயனார்** - இவர் இடையர். சோழநாட்டுச் சாத்தனூரிலவதரித்தவர். மூலனுடலிற் புகுந்து மூவாயிரம் ஆண்டிருந்து திருமந்திரம் அருளிச் செய்தவர். (36,40)

**திருவாதவூரர்** - மாணிக்கவாசக சுவாமிகள். (6)

**திருவாதிரைநாளின் பெருமை** - செய். 80 பார்,

**திருவாரூர்ப்பிறந்தவர்கள்** - இவர்கள் தொகையடியார் ஒன்பது பிரிவினருள் ஒருபிரிவினர். (41)

**தில தயிலம்** - எண்ணெய். (4)

**திலதயிலத்தொழில்மரபு** - எண்ணெய் வாணிபத்தொழில் மரபு - செக்கார் மரபு- (41)

**தில்லை** - சிதம்பரம் (28,29,32, 33,83,100,101,103)

**தில்லைமறையோர்** - தில்லைவாழந்தணர் மூவாயிரவர். (59)

**தில்லைவாழந்தணர்** - இவர்கள் தொகையடியார் ஒன்பது பிரிவினருள் ஒரு பிரிவினர்; சிதம்பர தலவுரிமைப் பார்ப்பனர்.

**துவயம்** - உத்தூளனம். (101)

**துறவறத்திலிருந்து முத்தி பெற்ற நாயன்மார்**:- மூர்த்திநாயனார், திருநாவுக்கரசுநாயனார் (47)

**தெண்டன்** - அட்டாங்க பஞ்சாங்க வணக்கம். (29)

**தெய்வவுலா** - திருக்கைலாயஞான வுலா வென்னும் ஆதியுலா. இது சேரமான் பெருமாள் நாயனாரால் அருளிச் செய்யப்பட்டது. (81)

**தேவுடனே** - தெய்வத்தன்மையோடு. தே - கடவுள், கிருபை (10)

**தேனிப்பார்** - தேன் முதலியன உண்டான் போற்களிப்பால் நாவைச் சுவைப்பார் (84)

**தொகையடியார் ஒன்பதின்மர்** - திருக்கூட்டம் ஒன்பது - பார். (41-42)

**தொண்டத் தொகை** - திருத்தொண்டத் தொகை பார். (23)

**தொண்டர்சீர்பரவ வல்லார், தொண்டர்சீர் பரவுவார், தொண்டர் சீர் பரவுவான்** - சேக்கிழார் (50,60,95,100,102,103)

**தொண்டைமான்** - சேக்கிழாரின் தம்பி பாலறுவாயருக்கு அநபாயச் சோழன் அளித்த பட்டப்பெயர். (99)

**நமிநந்தியடிகள்நாயனார்** - இவர் மறையவர். சோழநாட்டு ஏமப்பேறூரில் அவதரித்தவர், தண்ணீரால் விளக்கெரிக்குந் திருத்தொண்டியற்றியவர் திருவாரூர்ப்பிறந்தாரை யெல்லாம் சிவசாரூப்பியராகக் கண்டவர். (36,38)



**நம்பி** - சுந்தரமூர்த்தி நாயனார் (17)

**நம்பியாயிரம்** - சுந்தரமூர்த்தி நாயனார் பாடியருளிய திருத்தொண்டத் தொகை. (17)

**நம்பியாண்டார்** - நம்பியாண்டார் நம்பி. (23,24)

**நம்பியாண்டார் நம்பி திருவந்தாதி**- சுந்தரமூர்த்திநாயனார் செய்தருளிய அறுபத்துமூன்று நாயன் மாரைப்பற்றிக் கூறும் பதினொரு திருவிருத்தங் கொண்ட திருத்தொண்டத் தொகைக்குத் திருநாரையூர்ப் பொள்ளாப்பிள்ளையார் பொருளுரைக்க நம்பியாண்டார் நம்பி கேட்டுச் செய்தருளிய கலித்துறைத் திருவந்தாதி நூல். இது திருத்தொண்டத் தொகைக்கு வகை நூல். (23)

**நரசிங்கமுனையரையர் நாயனார்**- இவர் குறுநில மன்னர். நடுநாட்டிலவதரித்தவர். சுந்தரமூர்த்திநாயனாரை வளர்த்தவர். சிவ வேடம்பூண்ட காமக்குறி மலர்ந்த துர்த்தனையும்வழிபட்டவர். (36,39)

**நரபதி, நரேந்திரபதி** - அநபாயச் சோழன் (82,65)

**நவ கதை** - புதியகதை (22)

**நாமகள் மறந்தவை** - செய். 93 பார்.

**நாலாயிரத் திருநூற்றைம்பது திருவிருத்தங்களையுடையது** - பெரிய புராணம். (53)

**நால்வாய்** - அசைகின்றவாய் (1)

**நாவலர்** - கவிவாணர் (90)

**நாவனம்பி** - திருநாவலூரிலே அவதாரஞ் செய்தருளிய சுந்தரமூர்த்தி நாயனார்.

**நித்தன்** - சிவபெருமான், என்றுமுள்ளவன் (5)

**நிருதர்** - அவுணர், அரக்கர் (5)

**நிருத்தனார்** - பஞ்சகிருத்தியத் திருநடனஞ் செய்தருளும் நடேசப்பிரான் (35)

**நின்றசீர் நெடுமாறநாயனார்** - இவர் முடிமன்னர். பாண்டிநாட்டு மதுரையிலவதரித்தவர்; திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரளித்த திருநீற்றினாற் சுரம் நீங்கி அவர்திருவாக்காற் கூன் நிமிரப் பெற்றுச் சைவரானவர். (36,39)

**நீசர்** - புலையர் (41)

**நீசர் ஒருவர்புராணமானது**;- திருநாளைப்போவார்நாயனார் புராணம். (41)

**நீலிகதை** - 15, உரை ஆசிரியர் குறிப்புரை பார்.

**நூழில்படு** - சேறுபட்ட, கொல்லப்பட்ட (5)

**நேசநாயனார்** - இவர் சாலியர் காம்பீலி நகரிலவதரித்தவர்; சிவனடியார்க்கு வஸ்திர தானஞ் செய்தவர் (41)

**பகிரதிகுலதிலகர்** - சேக்கிழார் (97)

**பகிரதிநதி** - கங்காநதி (31)

**பசுங்குடி** - விவசாயி, போதியகுடி (12)

**படி** - கட்டளை. நிபந்தம், தேவர்கட்கேனும் அந்தணர் முதலானோர்க்கேனும் காலந் தோறும் இவ்வளவு பொருள் கொடுக்கற் பாலதென்னும் ஏற்பாடு (13)

**பதாதி** - காலாட்படை (58)

**பதியறிந்த கதையிரண்டு** - 37 உரை பார்.

**பத்தராய்ப்பணிவார்** - தொகையடியார் ஒன்பதுபிரிவினருள் ஒரு பிரிவினர் (41)

**பரசமயம்** - புறச்சமயம். அது புறப்புறச் சமயம், புறச்சமயம், அகப்புறச் சமயம் என மூவகைப்படும்.

''**புறப்புறச் சமயத்தவர்:** உலோகாயதரும் மாத்தியமிகர், யோகாசாரர், சௌத்திராந்திகர், வைபாடிகர் என்னும் நால்வகைப் பௌத்தரும், ஆருகதர் என்னுஞ் சமணருமாகி அறுவராவர். இவர் வேதம் சிவாகமம் என்னும் இரண்டையும் நிந்திப்பர்''

''**புறச்சமயத்தார்:** தார்க்கிகர், மீமாஞ்சகர், ஏகான்மவாதிகள், சாங்கியர், யோகமதத்தினர், பாஞ்சராத்திரிகள் என்னும் அறுவருமாவர், இவர் வேதத்தைப் பிரமாணமாகப் பொதுவகையாற் கொண்டு சிவாகமங்களை நிந்திப்பர். தார்க்கிகர் வேதத்தை நேரே பிரமாணமாகக் கொள்ளாது வேதப் பொருளோடு மாறுபட்டுப் பொருட்டன்மை கொள்வர் மீமாஞ்சகர் வேதத்தின் கன்மகாண்டத்தைப் பிரமாணமாகக் கொண்டு ஞானகாண்டத்தை இகழ்வர், ஏகான்மவாதிகள் ஞானகாண்டத்தை மாத்திரம் பிரமாணமாகக் கொண்டு கன்மகாண்டத்தை இகழ்வர், ஏனை மூவரும் தத்தம் மதத்துக்கு வேண்டுவனவற்றை மாத்திரம் எடுத்துக் கொண்டு ஏனையவற்றிற்குப் பிரமாணங் கொள்ளாது வேதத்துக்குப் புறமாகிய நூல்களைப் பிரமாணமாகக் கொள்வர்.''

''**அகப்புறச்சமயத்தார்:** பாசுபதர், மாவிரதர், கபாலர், வாமமதத்தினர், வைரவ மதத்தினர், ஐக்கியவாத சைவர் என்னும் அறுவருமாவர். இவருள்ளே பாசுபதர் முதலிய ஐவரும் வேதம் சிவாகமம் இரண்டையும் பொதுவகையாற் பிரமாணமாகக்கொள்ளினும், அவ்வேதம் சிவாகமம் இரண்டிற்கும் வேறாகிய பாசுபதம் முதலிய நூல்களைச் சிறப்புவகையாற் பிரமாணங் கொள்வர். ஐக்கிய வாத சைவர் வேதம் சிவாகமம் இரண்டையும் சிறப்புவகையாற் பிரமாணமாகக் கொண்டு அவற்றில் விலக்கியவற்றை நீக்கி, விதிக்கப்பட்டவற்றைச் செய்வாராயினும், ஆணவமலம் ஒன்று உளது என்பதை மறுத்து அதனுண்மையைச் சாதிக்குஞ் சிவாகமங்களை இகழ்வர்''

இச்சமயங்களைப்பற்றிய விரிவான விளக்கத்துக்குச் சிவஞான போதம், சித்தியார், சிவப்பிரகாசம், சங்கற்பநிராகரணம் என்னும் நூல்கள் பார்க்க. (3)

**பரதவர் ஒருவர் புராணமாவது** - அதிபத்த நாயனார் புராணம்.(36, 40)

**பரமமுத்தி** - பரமுத்தி பார். (26)

**பரமனையே பாடுவார்** - தொகையடியார் ஒன்பது பிரிவினருள் ஒரு பிரிவினர். (41)

**பரமுத்தி** - சாயுச்சிய முத்தி. நிலைபேறான முத்தி. முத்தி பார். (27)

**பரிகலம்** - பரிசனம், ஏவலாளர், சுற்றம். (19)

**பரிவட்டம்** - கடவுளாடை (33)

**பருப்பொருள்**-அற்பமாகியபொருள் நுண்மையற்ற பொருள், சுவையற்ற விஷயம். (10)

**பவம்** - பிறப்பு, பாவம். (46)

**பழையனூர் நீலி** - நீலி பார். (15)

**பன்னிரண்டாந் திருமுறை** - திருத்தொண்டர் புராணம். (96)

**பன்னிரு திருமுறை** - செய்.96 பார்.

**பன்னிரு திருமுறையிலடங்கிய சில பாடல்களை அருளிச்செய்த நாயன்மார் எழுவர்** - அவர்: ஐயடிகள் காடவர்கோன் நாயனார், கழறிற்றறிவார் நாயனார், காரைக்காலம்மையார், சுந்தரமூர்த்தி நாயனார், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசுநாயனார், திருமூல நாயனார்.



**பாணர் ஒருவர் புராணமாவது** - திருநீலகண்டத்து யாழ்ப்பாண நாயனார் புராணம். (36, 40)

**பாலறாவாயர்** - சேக்கிழாரின் இளைய சகோதரர். அநபாயச் சோழனுக்குச் சேக்கிழாரின் பின் மந்திரியானவர். (12,98)

**பாலறாவாயன் கேணி** - குன்றத்தூரிலுள்ளது. பாலறாவாயராற் றோண்டுவிக்கப்பட்டது. (98)

**பாறுமுகம்** - போரிற் புறமுதுகிட்டோடுதல். பாறுதல்-ஒழுங்கற்று நீங்குதல். (5)

**பிரமசாரியாயிருந்துமுத்திபெற்றவர்**- சண்டேசுவரநாயனார். (47)

**புகலியர்கோன்**-சீகாழியிலவதரித்த திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார். புகலி-சீகாழி (3)

**புகழ்ச்சோழ நாயனார்** - இவர் முடிமன்னர். சோழநாட்டு உறையூரிலவதரித்தவர். பகைவனது அறுபட்ட தலையிற் சிவசின்னமாகிய சடைகண்டஞ்சி உயிர் நீத்தவர். (36, 39)

**புகழ்த்துணைநாயனார்** - இவர் சிவவேதியர், செருவிலி புத்தூரிலவதரித்தவர். சிவபூசைக்குதவியாகப் பஞ்சகாலத்தில் இறைவனாற் காசு அளிக்கப் பெற்றவர். (36,38)

**புரட்டு** - பொய். (21)

**புராணபடனஞ் செய்யுமுறை** - செய். (78) பார்.

**புரிசை கிழான்**-சோழனாற் குடியேற்றப்பட்ட நாற்பத்தெண்ணாயிரவரில் ஒருகுடி, (முதுமொழிக் காஞ்சி பாடிய புலவர்.) (12)

**புலியூர்க்கோட்டம்** - (புலியூர் - சிதம்பரம், கோட்டம்-இடம். நாடு) வியாக்கிரபாதர் பூசித்த தலமாதலின் இதற்கிப் பெயருண்டாயிற்று. (வியாக்கிரம்-புலி, வியாக்கிரபாதர்-புலியின் பாதத்தை யுடையவர்.) (11)

**பூசலார்நாயனார்** - இவர் மறையவர். தொண்டை நாட்டுத் திருநின்றவூரிலவதரித்தவர். மனத்திலே கோயில் கட்டிச் சிவவழிபாடியற்றியவர். (36,38)

**பூசிப்பவர்** - சிவபூசை செய்பவர். (69)

**பூதி** - விபூதி. (68)

**பூலோக சிவலோகம்**-சிதம்பரம்(83)

**பூழியர் கோன்** - பாண்டிய மன்னன், (பூழியர்- பாண்டியர்) நின்றசீர்நெடுமாறன் (6)

**பெருமிழலைக்குறும்பநாயனார்** - இவர் பெருமிழலையூரிலவதரித்தவர். சுந்தரமூர்த்திநாயனாரை வழிபட்டு,அவர் கயிலைசெல்லுதலையறிந்து, யோகத்தாற்றாமுங் கயிலை சென்றவர். (37,41)

**பெரும்பற்றப்புலியூர்**-சிதம்பரம் (83)

**பேரறிந்தகதை**-37 உரை பார்.

**பேரறியாக்கதை**-37 உரை பார்.

**பொய்யடிமை யில்லாத புலவர்கள்**- தொகையடியார் ஒன்பது பிரிவினருள் ஒரு பிரிவினர். (42)

**பொன்வண்ணத் தந்தாதி** - இது சேரமான் பெருமாள் நாயனார் அருளிச்செய்தது. பதினோராந் திருமுறைப் பிரபந்தங்கள் நாற்பதுள் ஒன்று. (82)

**பொன்னரிமாலை** - பொன்னை மலரிதழ் போலரிந்து தொடுத்த மாலை (75, 88)

**மங்கல தூரியம்** - மங்கலவாத்தியம் (73)

**மடபதி**-மடாதிபதி (32)

**மடவளாகம்**-திருமதிலின் புறத்துள்ள வீதி (19)

**மரபறிந்த கதை இரண்டு**-37 உரை பார்.

**மரபறிந்தார் புராணம் ஐம்பத்தாறுதல்**-36 உரை பார்.

**மலடுகறந் துளந்தளர்தல்**-செய். 20 பார்.

**மல்கும்**-விருத்தி யடையும், நிறையும் (11)

**மறை**-வேதம். 'இருக்கு முதன் மறை'-பார் (1, 24, 77.)

**மறைஞானதேவர்** மறைஞான சம்பந்த சிவாசாரியர்நால்வருள் மூன்றாமவர். அருணந்தி சிவாசாரியாரின் மாணவர். உமாபதிசிவாசாரியாரின் குரு, (104)

**மன்று**-கனகசபை (2, 31, 33, 65, 78, 79, 83, 101)

**மாமாத்திரர்** மாமத்திரப் பிராமணர். (38)

**மாமாத்திரர் ஒருவர் புராணமாவது**-சிறுத்தொண்டநாயனார் புராணம். (36, 38)

**மாணியார்**—(மங்கையர்க்கரசியார்) இவர் அரசியார். பாண்டி நாட்டினர். திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாரை வரவழைத்துத் தமது கணவரையும் நாட்டினரையும் சைவராக்கியவர். (36,39)

**மின்மினிக்காய்ந்து நோதல்** - செய். 20 பார்.

**முத்தி**-மும்மலம் நீங்கிச் சிவாநுபவம் பெற்று இன்புற்றிருத்தல். அம்முத்தி அபரமுத்தி பரமுத்தி என இரு வகைப்படும். ஞான நூல்களைக் கேட்டல் சிந்தித்தல் தெளிதலிலே நின்று அவ்வளவில் யாக்கை நீங்கப் பெற்றவர் அபரமுத்தி யடைவர். அவற்ரேடு நிட்டையுங் கைவரப் பெற்று இம்மையிற்ருனே சீவன் முத்தராய் விளங்கியவர் தேகாந்தத்திற் பரமுத்தியடைவர். (27)

**முப்பத்திரண் டறங்களாவன** - ஆதுலர்க்குச்சாலை, ஓதுவார்க்குணவு, அறு சமயத்தோர்க்கு உண்டி, பசுவிற்கு வாயுறை, சிறைச் சோறு, ஐயம், தின்பண்டம் நல்கல், அறவைச் சோறு, மகப்பெறுவித்தல், மகவு வளர்த்தல், மகப்பால் வார்த்தல், அறவைப் பிணஞ் சுடுதல், அறவைத் தூரியம், சுண்ணம், நோய் மருந்து, வண்ணார், நாவிதர், கண்ணாடி, காதோலை, கண்மருந்து, தலைக் கெண்ணெய், பெண் போகம், பிறர் துயர் காத்தல், தண்ணீர்ப் பந்தர் மடம் தடம், கா, ஆவுரிஞ்சுதறி, விலங்கிற் குணவு, ஏறுவிடுதல், விலை கொடுத்து உயிர் காத்தல் கன்னிகாதானம். (14)

**முப்போதுந் திருமேனி தீண்டுவார்**- ஆதிசைவர். இவர் தொகையடியார் ஒன்பது பிரிவினருள் ஒரு பிரிவினர். (38, 42)

**முருட்டுக் கையர்**-பிடிவாத ஒழுக்கமுடையவர். (முருடு - பிடிவாதம்; கை-ஒழுக்கம்.) (20)

**முழு நீறு பூசும் முனிவர்** - இவர் தொகையடியார் ஒன்பது பிரிவினருள் ஒருபிரிவினர். (42)

**முறை**-திருமுறை. (86, 94)

**முனையடுவார்** - முனையடுவார்நாயனார்-இவர் வேளாளர். சோழநாட்டுத் திருநீடூரில் அவதரித்தவர். கூலிக்குப் போர்செய்து அக்கூலிகொண்டு, சிவனடியாரை வழிபட்டவர். (17,40)

**முன்னூல்** - முதனூல். (22)

**மூத்தபதிகம்**-திருவாலங் காட்டு மூத்த திருப்பதிகம்-இது காரைக்காலம்மையாரால்அருளிச் செய்யப்பட்டது. (81)

**மூர்க்கர்**-மூர்க்க நாயனார் - இவர் வேளாளர் தொண்டைநாட்டுத் திருவேற்காட்டிலவதரித்தவர். சூதாட்டத்திற் கிடைத்த இலாபங்கொண்டு சிவனடியாரை வழிபட்டவர். (17, 39)



**மூர்த்திநாயனார்** - இவர் வணிகர் குலத்தவர். பாண்டி நாட்டு மதுரையிலவதரித்தவர். சந்தனந் தருகிற திருப்பணியிலே முட்டுப்பாடு நேர்ந்தபொழுது முழங்கையை அரைத்தவர். திருநீறு உருத்திராக்கம், சடைமுடி ஆகிய மும்மையால் உலகாண்டவர் (36, 39)

**மூவர், மூவர்முதலிகள்** - திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசுநாயனார், சுந்தரமூர்த்திநாயனார், (34,81)

**மெய்கண்டதேவர்** - இவர் சந்தானசாரியருள் முதலாமவர். அருணந்தி சிவாசாரியாரின் குரு; சிவஞான போதத்தை அருளிச் செய்தவர். (104)

**மெய்ப்பொருள்நாயனார்** - இவர் குறுநில மன்னர். நடுநாட்டுத் திருக்கோவலூரி லவதரித்தவர். வஞ்சித்துத் தம்மைக் கொல்லும் வேடதாரியைக் காப்பாற்றித் தாம் உயிர்விட்டவர். (36, 39)

**வங்கியம்** - வேய்ங்குழல் (73)

**வணிகர் குலத்தவர் புராணங்களாவன** - காரைக்காலம்மையார் மூர்த்திநாயனார், கலிக்கம்ப நாயனார், அமர் நீதி நாயனார், இயற்பகைநாயனார், என்போரைப்பற்றிய புராணங்கள். (36,39)

**வண்ணார் ஒருவர் புராணமாவது** - திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணம் (36,41)

**வரன் முறை** - வரலாற்றுமுறை (34)

**வல்வினைசெய்தநாயன்மார் பதினெழுவர்** - அவர் அரிவாட்டாய நாயனார், எறிபத்தநாயனார், ஏயர்கோன் கலிக்காமநாயனார், கணம்புல்லநாயனார், கண்ணப்பநாயனார், கலியநாயனார், கழற்சிங்கநாயனார், கோட்புலிநாயனார், சண்டேசுவரநாயனார், சத்திநாயனார், சாக்கியநாயனார், சிறுத்தொண்டநாயனார், செருத்துணைநாயனார், திருக்குறிப்புத் தொண்டநாயனார், புகழ்ச் சோழநாயனார், மானக்கஞ்சாறநாயனார், மூர்த்திநாயனார்.

**வளவர் கோன், வளவர் கோமான், வளவர் பிரான், வளவர் பூபதி, வளவன்** - அநபாயச்சோழன் (84,86;95;25;52,59;18,19. 21,25,83)

**வறுமைமுதலிய துன்பநிலையிலும் வழிபாட்டைவிடாதுசெய்த நாயன்மார் ஒன்பதின்மர்** - அவர்: அதிபத்தநாயனார், இளையான்குடிமாறநாயனார், கணம்புல்லநாயனார், கலியநாயனார், குங்குலியக்கலயநாயனார், நமிநந்தியடிகள்நாயனார், புகழ்த் துணைநாயனார், மூர்க்கநாயனார், மூர்த்திநாயனார்.

**வன்ரொண்டர்** - சுந்தரமூர்த்திநாயனார் (இறைவனை வன்சொற் கூறி யழைத்தமையால் வன்ரொண்டர் என்னும் பெயருளாயிற்று) (6)

**வாக்கரையர்** - திருநாவுக்கரசுநாயனார் - இவர் வேளாளர். நடுநாட்டுத் திருவாமூரிலவதரித்தவர். திருவைந்தெழுத்தோதிக் கருங்கல்லின்மேற் கடலில் மிதந்து கரையேறிப் பலதேவாரப் பதிகங்கள் பாடிக் கைத்தொண்டு செய்து முத்தியடைந்தவர். (17,40)

**வாயிலார்** - வாயிலார்நாயனர், இவர் வேளாளர். தொண்டைநாட்டுத் திருமயிலாப்பூரிலவதாரஞ் செய்தவர்; மானச ஞானபூசைசெய்து முத்தி பெற்றவர். (17,39)

**வார்** - நீர் (2)

**விழுப்பொருள்** - மேன்மையாகிய பொருள், சிறந்த நுண்ணிய பொருள். (10)

**விறல்சேர்மிண்டர்** - விறன்மிண்டநாயனர், இவர் வேளாளர். மலைநாட்டுச் செங்குன்றூரிலவதரித்தவர். சுந்தரமூர்த்தி நாயனர் திருத்தொண்டத்தொகை பாடுதற்குக் காரணராயிருந்தவர். (17,40)

**வெண்சுதை** - மாக்கோலம். (78)

**வெப்பு** - சுரம். (6)

**வெளிக்கூடம்** - நிலாமுற்றம். (75)

**வேடர் ஒருவர் புராணமாவது** - கண்ணப்பநாயனர் புராணம். (36) 40)

**வேதத்தைத்தமிழாலோதிய மூவர்** திருப்பதிகம் தேவாரத் திருமுறைகள் (68)

**வேதியர்** - கணிதசாத்திரிகள். (57)

**வேளாளர் பதின்மூவர் புராணங்களாவன** - வாயிலார்நாயனர், சத்திநாயனர், விறன்மிண்டநாயனர், திருநாவுக்கரசுநாயனர், சாக்கியநாயனர், கோட்புலிநாயனர், மானக்கஞ்சாறநாயனர், ஏயர்கோன் கலிக்காமநாயனர், இளையான் குடிமாறநாயனர், மூர்க்கநாயனர், அரிவாட்டாயநாயனர். செருத்துணைநாயனர், முனையடுவார்நாயனர், என்போரைப்பற்றிய புராணங்களாம். (36,39-40)

அரும்பத விஷய அகராதி

முற்றிற்று.

---

